ISSN: 2582–5518




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ நவம்பர். 27, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 53 ❖ ரூ.10

## ”பயங்கரவாதத்தை இந்தியா நசுக்கிவிட்டது” மன் கி பாத்தில்

# பெருமிதம்

## 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவால்களில் ஒன்று நீர் பாதுகாப்பு. தண்ணீரைப் பாதுகாப்பது உயிரைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் குறைவானதல்ல:பிரதமர் மோடி

டெல்லி, நவ. 27–

”நவம்பர் 26 ஆம் தேதி மிக முக்கியமான நாள். 1949 ஆம் ஆண்டு இதே நாளில்தான் அரசியல் நிர்ணய சபை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது என மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்தார்.



பிரதமர் நரேந்திர மோடி அகில இந்திய வானொலி மூலம் நாட்டு மக்களுடன் தனது கருத்துகளை பகிர்ந்து கொண்டு வருகிறார். மனதின் குரல் (மன் கி பாத்) என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பாகிறது. கடந்த 2014-ம் ஆண்டு அக்டோபரில் இந்த நிகழ்ச்சி தொடங்கியது. இதன் 100-வது நிகழ்ச்சி கடந்த ஏப்ரல் மாதம் ஒலிபரப்பானது.

இந்நிலையில் பிரதமர் மோடி நேற்று மன் கி பாத் நிகழ்ச்சி மூலம் மக்களிடையே உரையாற்றினார். அப்போது அவர், மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதலை நினைவு கூர்ந்தார். "நவம்பர் 26 ஆம் தேதியை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. இந்த நாளில்தான் நாடு மிகக் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளானது. ஆனால், அந்தத் தாக்குதலில் இருந்து மீண்டு, பயங்கரவாதத்தை நசுக்கியது இந்த நாட்டின் திறன் மற்றும் துணிச்சல்தான். உயிர் நீர்த்த துணிச்சலான தியாகிகளை இந்த தேசம் நினைவு கூர்கிறது.

அதே சமயம் நவம்பர் 26 ஆம் தேதி மிக முக்கியமான நாள். 1949 ஆம் ஆண்டு இதே நாளில்தான் அரசியல் நிர்ணய சபை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இந்நாளில் நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்தைத் உருவாக்க இரண்டு ஆண்டுகள், 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் ஆனது. சமீபத்திய திருவிழாக்களின் போது சுமார் ரூ.4 லட்சம் கோடி வர்த்தகம் நடந்தது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு மக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் காணப்படுகிறது. 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவால்களில் ஒன்று நீர் பாதுகாப்பு. தண்ணீரைப் பாதுகாப்பது உயிரைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் குறைவானதல்ல. தண்ணீரை பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பு. தேசத்தை கட்டியெழுப்புவதில் பொதுமக்களும் பங்கு கொள்ளும்போது, அது நாட்டை முன்னேற்ற பாதைக்கு கூட்டி செல்கிறது. இன்று, இந்தியாவில் மக்கள் பல மாற்றங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த ஆண்டு இந்தியா நிறைய சாதனைகளை புரிந்துள்ளது” என்றார்.

சில குடும்பங்கள் வெளிநாடுகளில் திருமணங்களை நடத்துவது குறித்து கேள்வி எழுப்பிய பிரதமர் மோடி, இதுபோன்ற நிகழ்வுகளை நாட்டிற்குள்ளே நடத்த வேண்டும். UPI டிஜிட்டல் முறை மூலம் பணம் செலுத்த வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் மக்களை வலியுறுத்தினார்.

## ”போதுமான அளவு தண்ணீர் இருந்தும் பாசனத்துக்காக வைகை அணை திறக்கப்படாதது ஏன்?”

### தமிழக அரசுக்கு டிடிவி தினகரன் கேள்வி

சென்னை, நவ. 27–

"முல்லைப் பெரியாறு அணை 137 அடியை கடந்த நிலையிலும் வைகை அணையில் இருந்து தண்ணீரை திறக்க மறுப்பது ஏன்?" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் உள்ள பெரியாறு பிரதான கால்வாயின் கீழ் 85 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் ஒரு போக பாசன வசதி பெற்று வருகின்றன. பெரியாறு பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன பகுதிகளுக்கு 900 கன அடி வீதமும் திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன பகுதிகளுக்கு 230 கன அடி வீதமும் வைகை அணையிலிருந்து கடந்த 15-ம் தேதி திறக்கப்பட்ட நீர் 24-ம் தேதியுடன் நிறுத்தப்பட்டது.

வைகை அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் குடிநீர் தேவையை மட்டுமே பூர்த்தி செய்ததாகவும், விவசாயத் தேவைக்கு பயன்படவில்லை என அந்நீரை நம்பியிருக்கும் 120 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். பருவமழை பொய்த்த காரணத்தினால் கடந்த ஜூன் மாதம் கள்ளந்திரி இருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படாத நிலையில், தற்போது காலம் கடந்து திறக்கப்பட்டிருக்கும் குறைந்த அளவு தண்ணீரும் விவசாயத்துக்கு போதுமானதாக இல்லை என்பதால் மதுரை மாவட்ட விவசாயிகள் மிகுந்த விரக்தி அடைந்துள்ளனர்.

மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் மழையாலும் முல்லைப் பெரியாறு அணை நீராலும் வைகை அணை நிரம்பி உள்ளது. கடந்த காலங்களை ஒப்பிடும் போது முல்லைப் பெரியாறு அணையில் 118 அடி நீர் இருப்பு இருக்கும் போது ஒருபோக பாசனத்துக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்போது முல்லைப் பெரியாறு அணை 137 அடியை கடந்த நிலையிலும் வைகை அணையில் இருந்து தண்ணீரை திறக்க மறுப்பது ஏன்? இது தொடர்பாக விவசாயிகள் எழுப்பிய கேள்விக்கு மதுரை மாவட்ட ஆட்சியரும், அரசும் உரிய பதிலை வழங்காமல் தண்ணீர் திறக்க மறுப்பதால் விவசாயிகள் ஒன்று திரண்டு போராடும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே காவிரியில் இருந்து உரிய நேரத்தில் நீரை தமிழக அரசு பெற்றுத்தர முடியாத காரணத்தினால், டெல்டா பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கர் அளவிலான பயிர்கள் கருகிய நிலையில், ஒருபோக பாசனத்துக்கு தமிழக அரசு தண்ணீர் தர மறுப்பது மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

ஆகவே, பெரியாறு அணையில் போதுமான அளவு நீர் இருந்தும் பாசனத்துக்கு தண்ணீர் தர மறுப்பது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல் என்பதை உணர்ந்து, மதுரை மாவட்டம் பெரியாறு, திருமங்கலம் பிரதான கால்வாய், மற்றும் உசிலம்பட்டி 58 கிராம பாசனக் கால்வாயில் தண்ணீரை திறந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

## முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் ஸ்டாலின் இன்று திறக்கிறார் : அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்பு

சென்னை, நவ. 27–

சென்னை மாநில கல்லூரியில் நிறுவப்பட்ட முன்னாள் பிரதமர் வி.பி. சிங்-கின் சிலையை முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்.



இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக அரசு சார்பில் முன்னாள் இந்திய பிரதமர் வி.பி.சிங்–குக்கு சென்னை மாநில கல்லூரியில் ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வி.பி.சிங் சிலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 11 மணிக்கு திறந்து வைக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.

வி.பி.சிங் இந்திய பிரதமாக இருந்த போதுதான் காவிரி நதி நீர் பிரச்சினைக்கு தீர்ப்பாயத்தை அமைத்து தந்தார். உள்நாட்டு விமான நிலையத்துக்கு காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்துக்கு அண்ணாவின் பெயரையும் சூட்டினார்.

மேலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக பி.பி. மண்டல் தலைமையில் கமிஷன் அமைத்து, 2–வது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால், அரசு பணியிடங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை செயல்படுத்தினார்.

எனவே, வி.பி.சிங் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழக அரசின் சார்பில் சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் அவரது சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நடக்கிறது. இதில், உத்திரபிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## தி.மலை கார்த்திகை தீபத் திருவிழா: 2,668 அடி உயர மலை உச்சியில் ஏற்றப்பட்டது மகா தீபம் : பக்தர்கள் அரோகரா முழக்கம்

**திருவண்ணாமலை, நவ. 27–**

திருவண்ணாமலை கார்த்திகைத் தீபத் திருவிழாவையொட்டி 2,668 அடி உயரம் உள்ள திரு அண்ணாமலை உச்சியில் நேற்று மாலை 6 மணிக்கு மகா தீபம் ஏற்றப்பட்டது.



பஞ்சபூத திருத்தலங்களில் ‘அக்னி’ திருத்தலமான திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில், காவல் தெய்வமான துர்க்கை அம்மன் உற்சவத்துடன் கடந்த 14-ம் தேதி தொடங்கியது. காவல் தெய்வங்களின் வழிபாடு நிறைவு பெற்றதும், மூலவர் சந்நிதி முன்பு தங்க கொடிமரத்தில் கடந்த 17-ம் தேதி கொடியேற்றம் நடைபெற்றதும், பஞ்சமூர்த்திகளின் 10 நாள் உற்சவம் நடைபெற்றது. 7-ம் நாள் உற்சவத்தில் மகா தேரோட்டம் நடைபெற்றது. 23-ம் தேதி காலை தொடங்கி 24-ம் தேதி அதிகாலை வரை 5 திருத்தேர்கள் மாட வீதியுலா வந்தது.

கார்த்திகைத் தீபத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான பரணி தீபம் மற்றும் மகா தீபம் நேற்று (நவம்பர் 26-ம் தேதி) ஏற்றப்பட்டன. மூலவர் சந்நிதி முன்பு அதிகாலை 3.40 மணியளவில் பரணி தீபத்தை சிவாச்சார்யார்கள் ஏற்றினர். பின்னர், அந்த தீபத்தை வெளியே கொண்டு, ‘பஞ்சபூதங்களும் பரம்பொருளே, இறைவன் ஒருவனே’ என ஏகன் - அநேகன் தத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், 5 விளக்குகளில் ஏற்றப்பட்டன. பின்னர் ஒரு விளக்கில் ஏற்றப்பட்டது. பரணி தீபத்தை தொடர்ந்து பிரம்மதீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து விநாயகர், வள்ளி தெய்வானை சமேத முருகர், உண்ணாமுலை அம்மன் சமேத அண்ணாமலையார், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் தீப தரிசன மண்டபத்தில் ஒவ்வொருவராக எழுந்தருளினர். ஆண்–பெண் சமம் என்ற தத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் மாலை 5.58 மணியளவில், அர்த்தநாரீஸ்வரர் காட்சிக் கொடுத்தார். இந்நிகழ்வு ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் நடைபெறும். பின்னர், தங்க கொடிமரம் முன்பு உள்ள அகண்டத்தில் தீபம் ஏற்றப்பட்டதும், 2,668 அடி உயரம் உள்ள திரு அண்ணாமலை உச்சியில் மாலை 6 மணியளவில் ‘மகா தீபம்’ ஏற்றப்பட்டது. பருவதராஜ குல சமூகத்தினர் தீபத்தை ஏற்றி வைத்தனர். அப்போது அண்ணாமலையாருக்கு அரோகரா என பக்தர்கள் முழக்கமிட்டனர். கோயில் உட்பட நகரம் முழுவதும் மின் ஒளியில் ஜொலித்தன. வீடுகளில் அகல் விளக்குகளை ஏற்றி மக்கள் வழிபட்டனர். ஜோதி வடிவமாக அண்ணாமலையார் காட்சி கொடுப்பதால், கோயில் நடை அடைக்கப்பட்டது. பரணி தீபம் மற்றும் அர்த்தநாரீஸ்வரரை பல ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மோட்ச தீபம் என அழைக்கப்படும் மகா தீபத்தை 11 நாட்களுக்கு தொடர்ந்து தரிசிக்கலாம். இதற்காக 4,500 கிலோ நெய், 1000 மீட்டர் காடா துணி பயன்படுத்தப்படுகிறது. மலை உச்சியில் மகா தீபம் ஏற்றியதும், அண்ணாமலையாரை குளிர்விக்கும் வகையில் ஐயங்குளத்தில் 3 நாள் தெப்பல் உற்சவம் நடைபெற உள்ளது. 27-ம் தேதி இரவு சந்திரசேகரர், 28-ம் தேதி இரவு பராசக்தி அம்மன், 29-ம் தேதி இரவு முருகர் ஆகியோரது தெப்ப உற்சவம் நடைபெற உள்ளது. உண்ணாமுலை அம்மன் சமேத அண்ணாமலையார் 28-ம் தேதி கிரிவலம் செல்ல உள்ளார். வெள்ளி ரிஷப வாகனத்தில் வரும் 30-ம் தேதி நடைபெற உள்ள சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் 17 நாட்கள் நடைபெறும் கார்த்திகைத் தீபத் திருவிழா நிறைவு பெறுகிறது.

கார்த்திகைத் தீபம் மற்றும் பவுர்ணமியையொட்டி நேற்று அதிகாலை முதல் பக்தர்கள் கிரிவலம் செல்ல தொடங்கினர். 25 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள், இன்று அதிகாலை வரை விடிய விடிய கிரிவலம் சென்று சுவாமியை தரிசித்தனர். மகா தீபத்தை தரிசிக்க, மலை மீது ஏறி செல்ல சுமார் 2 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். சிறப்பு பேருந்துகள் மற்றும் ரயில்கள் இயக்கப்பட்டன. 14 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கொப்பரையில் இருந்து சேகரிக்கப்படும் தீப மை, ஆருத்ரா தரிசனத்தில் நடராஜருக்கு சாத்தப்பட்டு பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும்.

## வேளாண் துறையில் வேலைவாய்ப்பு 263 பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

சென்னை, நவ. 27–

தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத் துறையில் உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை துணைப் பணியில் உதவி தோட்டக்கலை அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கு நடைபெற உள்ள போட்டித் தேர்வுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.





தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் தமிழ்நாடு தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர் நிலையில் மொத்தம் 263 பணியிடங்களை நிரப்ப போட்டித் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கு நேற்று முதல் டிசம்பர் 24 ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. விண்ணப்பங்களில் திருத்தங்களை மேற்கொள்ள டிசம்பர் 29 நள்ளிரவு 12.01 முதல் டிசம்பர் 31 இரவு 11.59 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 7ம் தேதி இதற்கான தேர்வு கணினி முறையில், இரண்டு ஷிஃப்டுகளாக நடைபெற உள்ளது.

18 வயது முதல் 32 வயது வரையிலான நபர்கள் இந்தத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் எஸ்சி, எஸ்டி, எம்பிசி, பிசி முஸ்லிம்கள் மற்றும் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு வயது வரம்பு எதுவும் இல்லை. இந்த பணிக்கு ஊதியமாக ரூ 20,600 முதல் ரூ.75,900 வரை வழங்கப்படும். டி.என்.பி.எஸ்.சி தேர்வை எழுத ஒரு முறை விண்ணப்பப் பதிவு செய்ய வேண்டியது அவசியம். இதற்கு ரூ.150 செலுத்த வேண்டும். ஒரு முறை பதிவு செய்தால், 5 ஆண்டுகளுக்கு முன்பதிவு செல்லுபடியாகும்.

தொடர்ந்து தேர்வுக்கான கட்டணமாக ரூ.100-ஐச் செலுத்த வேண்டும். இதில் எஸ்சி, எஸ்சி அருந்ததியர்கள், எஸ்டி, கைவிடப்பட்ட கைம்பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கட்டணம் எதையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்காக சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணைய முகவரி https://www.tnpsc.gov.in/ என்ற பக்கத்தில் மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

# இன்று

27 · 11 · 2023

பௌர்ணமி



குருநானக் ஜெயந்தி

சக வருடம் 1945 மார்கசீர்ஷம் 06

இஞ்சி சாறு பாலில் கலந்து சாப்பிட்டால் வயிறு பிரச்சனைகள் தீரும்

சோபகிருது கார்த்திகை 11 | NOV - MON திங்கள் | ஜமா அத்துல் அவ்வல் 13 | பௌர்ணமி 331 / 034

பௌர்ணமி 22.09 (மா. 03.07) கார்த்திகை 20.28 (மா. 02.26) தியாஜ் 00.00 அகஸ் 28.42 மரண 20.28 மேல் அமிர்த. இந்திரஸாவர்ணி மன்வாதி. **பௌர்ணமி. குருநானக் ஜெயந்தி.** பாஞ்சராத்ரதீபம். திருவண்ணாமலை அருணாச்சல நாயகர் சந்திரசேகரர் தெப்போற்சவம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.15-7.15 | 9.15-10.15 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு
பரிகாரம் : தயிர்
விருச்சிக லக்கனம் இருப்பு நா. 3 வி. 30
கரணம் : 9-10.30
சூரிய உதயம் : 6.15
சந்திராஷ்டமம் சித்திரை சுவாதி

**இராசிபலன்**

மேஷம் - பொறுமை
ரிஷபம் - லாபம்
மிதுனம் - சிந்தனை
கடகம் - அன்பு
சிம்மம் - இரக்கம்
கன்னி - நட்பு
துலாம் - உதவி
விருச்சி - புகழ்
தனுசு - மேன்மை
மகரம் - எதிர்ப்பு
கும்பம் - மகிழ்ச்சி
மீனம் - சுகம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

என்னிடம் சிறப்பான
தனித்திறமை என்று
எதுவுமே இல்லை

என்னிடம் இருப்பது
ஆர்வம் மட்டுமே!




புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,755 | Rs. 6,225 |


# தமுஎகச சார்பில் தோழர் என்.சங்கரையாவுக்கு புகழஞ்சலி



புதுக்கோட்டை, நவ.27:- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டக்குழு சார்பில் முதுபெரும் பொதுவுடமை இயக்கத்தலைவர், தகைசால் தமிழர் சங்கரையாவுக்கு புதுக்கோட்டையில் புகழஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுக்கோட்டை அறிவியல் இயக்க கூட்ட அரங்கில் நடைபெற்ற புகழஞ்சலி நிகழ்வுக்கு தமுஎகசமாவட்டத்தலைவர் ராசி.பன்னீர்செல்வன் தலைமை வகித்தார். 'சங்கரையாவின் எழுத்தும் பேச்சும்' என்ற தலைப்பில் மாநில துணைத் தலைவர் நா.முத்துநிலவன், 'பொதுவுடமை இயக்க வரலாற்றில் சங்கரையா' என்ற தலைப்பில் சிபிஎம் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், 'சுதந்திரப் போரில் சங்கரையா' என்ற தலைப்பில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாகிஎன்.கண்ணம்மாள் ஆகியோர் உரையாற்றினர்.

'தமுஎகசஉருவாக்கத்தில் சங்கரையா' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் எம்.ஸ்டாலின் சரவணன், 'சட்டமன்றத்தில் சங்கரையா' என்ற தலைப்பில் புதுகை பிலிம் சொசைட்டி நிறுவனர் எஸ்.இளங்கோ, 'இதழ் பணியில் சங்கரையா' என்றதலைப்பில் சினிமா பாடலாசிரியர் இரா.தனிக்கொடி, பத்திரிகையாளர் சு.மதியழகன் ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக மாவட்ட துணைச் செயலாளர் சு.பீர்முகமது வரவேற்க, பொருளாளர் கி.ஜெயபாலன் நன்றி கூறினார்.

# அரியலூரில் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு பொதுக்குழு பாராட்டு விழா



அரியலூர் நவ. 27

அரியலூரில் பண்பாட்டுப் பேரமைப்பு பொதுக்குழு மற்றும் நல்லாசிரியர் விருது பெற்றோருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய கிழக்கு தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, தமிழ் பண்பாட்டு பேரமைப்பு பொதுக்குழு கூட்டத்துக்கு, அதன் தலைவர் சீனி பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். துணைத் தலைவர்கள் புலவர் சி இளங்கோ, கதிர் கணேசன், துணை செயலாளர் ஜோதி ராமலிங்கம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ் பண்பாட்டு பேரமைப்பின் பொருளாளர் கொ வி புகழேந்தி, ஆண்டு வரவு, செலவு அறிக்கையை படித்தார். தமது உடல் நலம் கருதி, செயலாளராக பணியாற்றி வரும் பேராசிரியர் ராமசாமி பதவி விலகலை ஏற்றுக் கொண்டு, அவருக்கு நிறுவன தலைவர் பதவி வழங்குவதுடன், தமிழ் பண்பாட்டுபேரமைப்பின் புதிய செயலாளராக, டாக்டர் கதிர் கணேசன், ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அரியலூர் மாவட்டத்தில், டாக்டர் ராதாகிருஷ்ணன் பெயரிலான விருது பெற்ற, பெரிய திருக்கோணம் பாலசுப்ரமணியன், இடையார் தங்கையன், முல்லையூர் புவனேஸ்வரி, தா பழூர் குணசேகரன், அரியலூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் உமா ஆகியோருக்கும், மாவட்ட அளவில் சிறந்த பள்ளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரியலூர் ஊராட்சி ஒன்றிய கிழக்கு பள்ளி, இடையார், முல்லையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் ஆகியவற்றுக்கான கேடயங்களை வழங்கி, புதிய செயலாளர் டாக்டர் கதிர் கணேசன் சிறப்புரையாற்றினார். டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்கள் பற்றி, தமிழ் பண்பாட்டு பேரமைப்பின் அமைப்புச் செயலாளர் நல்லப்பன் ஆசிரியர் விளக்கிப் பேசினார். தமிழ் பண்பாட்டு பேரமைப்பு துணைத் தலைவர்களாக பிரஸ் செந்தில், சிலால் அன்பு சித்ரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் பலர் நியமிக்கப்பட்டனர்.

இக்கூட்டத்தில் சங்க நிர்வாகிகள், ஜெயங்கொண்டம் பன்னீர்செல்வம், அஞ்சை இராவணன், சிவக்கொழுந்து, மங்கையர்க்கரசி, செல்ல பாண்டியன், ராஜேஸ்வரி, கொடுக்கூர் சரவணன், பொய்யூர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தமிழ் களம் இளவரசன் நன்றி கூறினார்.




கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


# 5 பேருக்கு மறுவாழ்வு அளித்த மூளைச்சாவு அடைந்த கல்லூரி மாணவர்

மதுரை, நவ .27-

விபத்தில் மூளைச்சாவு அடைந்த கல்லூரி மாணவரின் உடல் உறுப்புகள் மூலம் 5 பேர் மறுவாழ்வு அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம் கம்பம் பகுதியைச் சேர்ந்தவர் பரத்குமார் (19). வீரபாண்டி சவுராஷ்ரா கல்லூரியில் பிபிஏ 2ம் ஆண்டு படித்து வந்தார். இவர், உத்தமபாளையம் அனுமந்தம்பட்டி அருகே இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு இரு சக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானார். இதில், தலையில் பலத்த காயம் அடைந்து தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனளிக்காமல் மூளைச்சாவு அடைந்தார். பரத்குமாரின் தந்தை தன்னுடைய மகன் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்தார். இதையடுத்து, பரத்குமாரின் இதயம், நுரையீரல்கள், சிறுநீரகம், கல்லீரல் ஆகியவற்றை எடுத்து அதனை, சென்னை, தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் 5 நோயாளிகளுக்கு வழங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

மூளைச்சாவு அடைந்த இவரின் மரணம் பெரும் சோகத்தை ஏற்படுத்திய நிலையிலும் அவரது உடல்உறுப்புகள் மூலம் 5 பேர் மறுவாழ்வு பெற்றதை நினைத்து அவரது குடும்பத்தினர் ஆறுதல் அடைந்துனர்.

### கடையநல்லூர் அருகே அச்சம்பட்டியில் குளம் உடைப்பு

# விவசாய பணிக்கு சேமித்து வைத்த தண்ணீர் வீணாக நிலங்களுக்குள் பாய்ந்து ஓடியது எம்எல்ஏ நேரில் விசிட்



கடையநல்லூர், நவ .27-

கடையநல்லூர் அருகே மங்களபுரம் அச்சம்பட்டி கிராமத்திற்கு பாத்தியப்பட்ட குளம் உள்ளது இந்தக் குளம் 11.7 ஹெக்டர் நிலப்பரப்பு உள்ளது குளத்துக்கு பாத்தியப்பட்ட 99.19 ஹெக்டர் நஞ்சை நிலம் உள்ளது 90 நாட்கள் பாசன வசதி வரும் அச்சம்பட்டி குளமாகும் இங்குள்ள விவசாயிகள் அதில் விவசாயம் செய்து வருகின்றனர்.

இங்குள்ள விவசாயிகள் அதில் நெல் விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த இரண்டு நாட்களாக பெய்த தொடர் மழையால் குளம் நிரம்பி வழிந்தது இதனால் விவசாயிகள் நெல் நடவுக்கு தேவையான நாற்றங்கால் பணியில் செய்து வந்தனர். மறுகால் பகுதியில் குளத்தில் உடைப்பு ஏற்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ள தண்ணீர் அனைத்தும் வீணாக இதற்குக்கீழ் உள்ள குளங்களுக்கு பாய்ந்தோடி செல்கிறது. இந்த குளக்கரையை விவசாய சங்கம் சார்பில் பல லட்சம் ரூபாய் செலவில் பொதுப்பணித்துறை சார்பில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு மறுகால் பகுதியில் குடிமராமத்து பணிகள் நடைபெற்றது.

இருப்பினும் மறுகால் சுற்றிலும் ஆழமான முறையில் தடுப்புச் சுவர் கட்டாததால் தடுப்புச் சுவருக்கு கீழ் பகுதி நீர் கசிவு ஏற்பட்டு குளத்தின் கரை சிதிலமடைந்து இந்த உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு இப்பகுதியில் நெல் விவசாயம் செய்ய முடியாமல் போய்விடுமோ என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். உடைப்பு ஏற்பட்ட குளத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் செ. கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா, மாவட்டத் துணைச் செயலாளர் பொய்கை மாரியப்பன், கடையநல்லூர் கோட்டாட்சித் தலைவர் லாவண்யா, தாசில்தார் கங்கா, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணியன் பாண்டியன், பொறியாளர் உதயகுமார், மணி ஆய்வாளர் பணி ஆய்வாளர் சீனிஅய்யா, ஒன்றிய செயலாளர் வசந்தம் முத்துபாண்டியன் மற்றும் பஞ்சாயத்து தலைவி கஸ்தூரி இன்பராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா உடனடியாக கரையை சரி செய்து மீண்டும் குளத்துக்கு தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

### சங்கரன்கோவில் தொகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை

# ராஜா எம்எல்ஏ ஆய்வு செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கினார்



சங்கரன்கோவில்.நவ.27.

சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேல இலந்தைகுளம், மூவிருந்தாளி, அச்சம்பட்டி கிராம சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட கனமழையால் பல வீடுகள், சாலைகள் சேதமடைந்தன. இந்நிலையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து பொது மக்களுக்கு நிதி உதவி மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கினார்.

தொடர்ந்து அரசு அதிகாரிகளிடம் மழையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். அதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அரசின் மூலம் வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் விரைவில் வழங்க ஏற்பாடு செய்யபடும் என தெரிவித்தார். அதற்கு அப்பகுதி பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். ஆய்வின் போது மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் வெற்றி விஜயன், பெரியதுரை, மானூர் ஒன்றிய பெருந்தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன், அச்சம்பட்டி ஊராட்சி மன்றதலைவர், அல்லிதுரை சண்முகதாய், மூவிருந்தாளி ஊராட்சி மன்றத் தலைவர் வெள்ள பாண்டியன், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பாளர் வீமராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பசுபதி பாண்டியன், மூவிருந்தாளி கிளை செயலாளர் ஜோசப், மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மத்திய சிறையில் புரோட்டா உணவு அறிமுகம் படுத்தும் நிகழ்ச்சிக்கு "குக் வித் கோமாளி" புகழ், நடிகர் காளையன் கலந்து கொண்டு துவங்கி வைத்தார். மேலும் மதுரை மத்திய சிறையில் செயல்பட்டு வந்த நர்சரி கார்டன் புதுப்பிக்கப்பட்டு புதிதாக திறந்து வைக்கப்பட்டது. இதில் மதுரை சரகம் சிறைத்துறை துணைத் தலைவர் பழனிசார், கூடுதல் கண்காணிப்பாளர் பொறுப்பு பரசுராமன் சார், சிறை அலுவலர் முனீஸ் திவாகர், சந்திரசேகர் அ.தி.மு.க. இலக்கிய அணி மாவட்ட தலைவர் மேலும் சிறைத்துறை போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம்- குற்றாலத்திற்கு மாணவர் அணி சார்பில் கருத்தியல் கருத்தரங்கத்திற்கு வருகை புரிந்த நீலகிரி மாவட்ட எம்.பி, திமுக துணை பொது செயலாளர் ஆ.ராசாவை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை சேர்ந்தமங்கலத்தில் தனது ஆதரவாளர்களுடன் சிறப்பான வரவேற்பு அளித்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பா.சுரேஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ரா.முருகன், நகரத் துணைச் செயலாளர் காசி, செய்யதுமசூது, மீரான், முருகையா, கருப்பசாமி, முகைதீன் கனி, முருகானந்தம், ஒன்றிய பிரதிநிதி சுரேஷ், மாரியப்பன் ஆதிதிராவிட நலத்துறை அமைப்பு செயலாளர், நல்லையா ஆகியோர் கலந்துகொண்டு வரவேற்றனர்.

### "ஊழல் செய்த புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி மீது

# பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" நாராயணசாமி வலியுறுத்தல்



புதுச்சேரி , நவ. 27-

ஊழல் புரிந்துள்ள புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி மீது பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது : "புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கை பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படவில்லை. மக்கள் கடும் அவதி அடைந்துள்ளனர். இது ஊழல் மலிந்த ஆட்சி. அதற்கான அறிக்கையை தயாரிக்க ஆயத்த வேலை நடக்கிறது. கலால்துறை, உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, கல்வித்துறை, காவல்துறை ஆகியவற்றில் ஊழல் மட்டுமில்லாமல் முதல் அமைச்சர், அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு பட்டியலை தயார் செய்து வருகிறோம்.

முதல்வர் ரங்கசாமி வியாபாரமோ, தொழிலோ செய்யாமல் ரூ. 5 கோடியில் திருமண மண்டபத்தை மேட்டுப்பாளையத்தில் கட்டுகிறார். இதற்கான நிதி ரங்கசாமிக்கு எங்கிருந்து வந்தது. இது ஊழல் பணம். கலால்துறை ஊழல் மற்றும் பொதுப் பணித்துறை லஞ்சப்பணத்திலும் இந்த திருமண மண்டபத்தை கட்டுகிறார். எந்த தொழிலும் செய்யாத முதல்வர் ரங்கசாமிக்கு, ரூ. 5 கோடி எங்கிருந்து கிடைத்தது என்று பதில் சொல்லவில்லை. அமைச்சர் ஒருவர் நகரப்பகுதியில் ஓர் இடத்தை மனைவியின் பெயரில் கிரயம் பெற்றுள்ளார். அது வங்கி இருந்த இடம். அது தரைமட்டமாக்கப்பட்டு, தடுப்பு போடப்பட்டுள்ளது. அவரது மனைவிக்கு பணம் எங்கிருந்தது வந்தது. அவர் பாஜகவைச் சேர்ந்தவர். இதுபோல் பல உதாரணங்கள் இருக்கின்றன.

ஊழலை ஒழிப்பேன், நேர்மையான ஆட்சியை தரவே பிரதமராக இருக்கிறேன் என்றெல்லாம் நரேந்திர மோடி கூறுகிறார். அவரது கட்சி புதுச்சேரி கூட்டணியில் உள்ளது. முதல்வர் தொடங்கி அமைச்சர்கள் வரை ஊழலில் ஈடுபட்டுள்ளனர். புதுச்சேரியில் என். ஆர்.காங்கிரஸ்- பாஜக ஆட்சியில் ஊழல் மலிந்து விட்டது. உண்மையில் ஊழலை ஒழிப்பதாக இருந்தால் முதல்வரையும், அமைச்சரையும் சிறையில் தள்ள வேண்டும். மக்களை ஏமாற்றுவதற்காக ஊழல் இல்லாத ஆட்சி தருவதாக மோடி புலம்புகிறார். பிரதமர் அனைத்து மாநிலங்களையும் கண்காணிக்கிறார். தற்போதைய குற்றச்சாட்டு தொடர்பாக பிரதமர் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஊழலுக்கு ஆதரவாக இருப்பதாகதான் அர்த்தம்.

ஊழல் செய்யாவிட்டால் முதல்வரும், அமைச்சரும் பதில் சொல்லட்டும். ஆதாரத்தை காட்டுகிறேன். இதில் ஆளுநரும் கூட்டுக்கொள்ளை. அதனால்தான் குடியரசுத் தலைவரை பார்க்க போகிறோம். 5 மாநிலத் தேர்தல்களில் நான்கில் காங்கிரஸ் வெல்லும். காங்கிரஸில் கோஷ்டி மோதல் பற்றி கேட்கிறீர்கள். எந்த கட்சியில்தான் கோஷ்டி இல்லை. பாஜக உள்ளிட்ட எக்கட்சியில் தான் கோஷ்டி இல்லை. இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சியிலும் கோஷ்டி உள்ளது." இவ்வாறு நாராயணசாமி குறிப்பிட்டார்.

# சென்னை மெட்ரோ ரயில் சேவை இன்று முதல் அதிகரிப்பு



சென்னை, நவ. 27-

பயணிகள் காத்திருப்பு நேரத்தை குறைப்பதற்காகவும் இரண்டுவழித்தடங்களிலும் நெரிசல் மிகு நேரங்கள் இல்லாது மற்ற நேரங்களில் 9 நிமிட இடைவெளியில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் சேவைகள் இன்று முதல் 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: சென்னை மெட்ரோ ரயில்களில் அலுவலக நேரம் அல்லாத மற்ற நேரங்களிலும் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, மழை காலம் தொடங்கி உள்ளதால், போக்குவரத்து நெரிசல் இன்றி விரைவாக பயணம் செய்ய மெட்ரோ ரயில்களில் மக்கள் அதிகளவில் பயணம் செய்ய விரும்புகின்றனர்.

எனவே, நெரிசல் மிகு நேரம் அல்லாத மற்ற நேரங்களிலும் மெட்ரோ ரயில்களின் சேவை அதிகரிக்கப்பட்டு 7 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். மேலும், மெட்ரோ ரயில் நிலையங்களில் கூடுதல் நகரும் படிக்கட்டுகள், மின் தூக்கி வசதி மற்றும் இணைப்பு வாகன வசதியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று அவர்கள் கூறினர்.

27.11.2023 ❖ வரலாறு

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட விசிக சார்பில் முப்பெரும் விழா



ஊத்துக்கோட்டை, நவ27–

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கட்சிக்கொடியை ஏற்றி வைக்கும்நிகழ்ச்சி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் சி.நீலமேகம் அவர்களுக்கு 50–ம் ஆண்டு பிறந்தநாள் விழா,25 ஆண்டுகள் கள பணியாற்றியமைக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதை முன்னிட்டு மீஞ்சூர் ஒன்றியம், பொன்னேரி ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கட்சி கொடியை ஏற்றி வைத்து தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் பின்னர், காரனோடை பஜார் வீதியில் உள்ள கே.பி.கே திருமண மண்டபத்தில் பிறந்தநாள் விழா மற்றும் பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்,மாநில அரசியல் குழு செயலாளர் நீலவானத்து நிலவன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி சுந்தரம்,ஆவடி மாநகர செயலாளர் ஆவடி ஆதவன், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் அருண்கௌதமன் ஆகியோர் கலந்துகொண்டு நீலமேகத்தின் பிறந்தநாளுக்கு வாழ்த்து கூறினர்.

இதன் பின்னர்,கால் நூற்றாண்டு களப்பணி ஆற்றியமைக்கு பாராட்டு தெரிவித்து பேசினார். இந்நிகழ்ச்சியில், கும்மிடிப்பூண்டி தொகுதி செயலாளர் கவிஞர் வக்கீல் ஜீவா,துணைச் செயலாளர் ராள்ளை பாபு,மாதவரம் தொகுதி செயலாளர் செந்தில், பொன்னேரி தொகுதி செயலாளர் கே.சேகர், சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் காந்தி, கிழக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை பிரகாஷ், ஆவடி சிறுத்தை ரமேஷ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில், அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்களுக்கான ஏற்பாடுகளை சமூக சேவகரும்,நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளருமான டேனிகிங்பால் சிறப்பாக செய்திருந்தார்.



நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாய்நாதபுரம் கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் சிறப்பு முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வேலூர் வட்டாட்சியர் செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

# காதர்வேடு கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றில் குளிக்கச் சென்ற கொத்தனார் தவறி விழுந்து பலியானார்

ஊத்துக்கோட்டை, நவ27–



திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், காதர்வேடு கிராமம்,விநாயகர் கோவில் தெருவில் வசித்து வந்தவர் சீனிவாசன்(வயது45) ஆவார்.கொத்தனார் வேலை மற்றும் கூலி வேலை செய்து வந்தார்.இந்நிலையில், இவரது அண்ணி இதே கிராமத்தைச் சேர்ந்த இந்திராணி என்பவர் நேற்று முன்தினம் இறந்து விட்டார்.

எனவே, இந்திராணியின் உடல் அடக்கம் செய்யும் துக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.பின்னர்,நேற்று முன்தினம் மாலை காதர்வேடு கிராமத்தில் உள்ள கொசஸ்தலை ஆற்றுக்கு குளிக்க சென்றார். அப்பொழுது கால் தவறி தண்ணீர் தேங்கியுள்ள பெரிய பள்ளத்தில் விழுந்து விட்டார். இதனால் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! என்று அவர் கூக்குரல் இட்டார். அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து அவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தபோது மூச்சு திணறி இறந்து இருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து சீனிவாசனின் தம்பி மகன் வெங்கடேசன் வெங்கல் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.எனவே,வெங்கல் காவல் நிலைய போலீசார் இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து பலியான சீனிவாசனின் உடலை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும்,இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். பலியான சீனிவாசனுக்கு ஹேமலதா என்ற மனைவியும், லட்சுமிபிரியா(வயது23), கீர்த்திகா(வயது21) என்ற மகள்களும், பாலாஜி(வயது19) என்ற மகனும் உள்ளனர்.



கார்த்திகை திருநாளை முன்னிட்டு உத்திரமேரூர் பஜார் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு பாலதண்டயுதபாணி முருகனுக்கு சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபம் ஏற்றப்பட்டது

## ஐஎஸ்எல் கால்பந்து போட்டி

# சென்னையின் எப்சி அணி கடைசிவரை போராடியும் ஈஸ்ட் பெங்கால் எப் சி அணியுடனான ஆட்டம் 'டிரா'வில் முடிந்தது

சென்னை,நவ,27



12 அணிகள் கலந்து கொண்டுள்ள 10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் லீல் சுற்று போட்டிகள் பல நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் சில லீக் ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் சர்வதேச கால்பந்து போட்டிகளை கருத்தில் கொண்டு கடந்த 8ஆம் தேதி முதல் நேற்று முன் தினம் வரை இடைவெளி விடப்பட்டது.

இந்நிலையில் இடைவெளி முடிவடைந்து நேற்று முன் தினம் முதல் மீண்டும் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்றது. இதில் நேற்று முன் தினம் மாலை சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற போட்டியில் சென்னையின் எப்சி - ஈஸ்ட் பெங்கால் எப் சி அணிகள் மோதின. பரபரப்பான இந்த போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

இதனால் ஆட்ட நேரமுடிவில் 1-1 என கோல் சமன் ஏற்பட்டு போட்டி டிரா ஆனது. புள்ளிகள் பட்டியலில் சென்னையின் எப் சி அணி 7வது இடத்திலும் , ஈஸ்ட் பெங்கால் எப் சி அணி 9வது இடத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

# விவசாயிகளுக்கு கதராடை அணிவித்து கலெக்டர் வாழ்த்து

வேலூர். நவ.27–



இயற்கை விவசாயிகள் விற்பனை அங்காடியின் 201 வது வாரத்தை முன்னிட்டு வேலூர் மாவட்ட ஆட்சியர், விவசாயிகளுக்கு கதராடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் பூமாலை வணிக வளாகத்தில் உள்ள இயற்கை விவசாயிகள் விற்பனை அங்காடியின் 201 வது வாரத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன், இயற்கை விற்பனை அங்காடியை பார்வையிட்டு விவசாயிகளுக்கு கதர் ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. ஆர்த்தி, மகளிர் திட்ட இயக்குநர் யு. நாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல்நிலையில் முன்னேற்றம்

சென்னை, நவ,27



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த 18–ம் தேதி அனுமதிக்கப்பட்டார். வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காகச் சென்றுள்ளார், விஜயகாந்த் ஓரிரு நாளில் வீடு திரும்புவார் என தே.மு.தி.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே மார்பு சளி, இருமல் காரணமாக செயற்கை சுவாசக் கருவியுடன் விஜயகாந்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், விஜயகாந்த் உடல்நிலையில் முன்னேற்றம் உள்ளது என மருத்துவமனை நிர்வாகம்தெரிவித்துள்ளது. உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் விஜயகாந்திற்கு பொருத்தப்பட்ட செயற்கை சுவாசக் கருவி அகற்றப்பட்டுள்ளது. அவர் இயற்கையாக சுவாசிக்கிறார் எனவும், அவர்சாதாரண வார்டிற்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயகாந்த் உடல்நிலையில் முன்னேற்றம்ஏற்பட்டுள்ள நிலையில் அவர் விரைவில் வீடுதிரும்புவார்எனதகவல் வெளியாகியுள்ளது.

## சென்னை கொருக்குப்பேட்டையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட

# மூன்று ரவுடிகள் உட்பட நான்கு பேர் கைது வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் தனிப்படை அதிரடி

சென்னை,நவ,27




சென்னை கொருக்குப்பேட்டை ஜேஜே நகர் பகுதியைச் சேர்ந்த ஜான்சன் என்பவரிடம் வினோத் என்பவர் 2 கிலோ கஞ்சா வேண்டும் என்று தொலைபேசியில் கேட்டு உள்ளார் இரண்டு கஞ்சாவுக்கு 27000 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்து விட்டு வியாசர்பாடி முல்லை நகர் பகுதியில் வந்து வாங்கும்படி ஜான்சன் கூறியுள்ளார்.

இதனையடுத்து சனிக்கிழமை மதியம் வினோத் தனது இருசக்கர வானத்தில் வியாசர்பாடி முல்லை நகர் பகுதி சென்று ஜான்சனிடம் 27000 பணம் கொடுத்து 2 கிலோ கஞ்சா வினோத் வாங்கும் போது அங்கு பதுங்கியிருந்த வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் தனிப்படை போலீசார் இருவரையும் கைது செய்து காவல் நிலையத்தில் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

வினோத் கொடுத்து தகவலின் பேரில் சூரியா (எ) மணிகண்டன், குணசேகரன் ஸ்டீபன் இருவரையும் தனிப்படை போலீசார் கைது செய்து அவர்களிடமிருந்து கிலோ கிலோ 400 கிராம் கஞ்சா பறிமுதல் செய்தனர் இதனையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் கொருக்குப்பேட்டை ஜான்சன்(38) மீது 10 வழக்குகளும், மணலி புதுநகர் வினோத் (36)மீது 8 வழக்குகளும், புளியந்தோப்பு சூர்யா(30) மீது கொலை வழக்கு உட்பட 12 வழக்குகளும் உள்ளதாக போலீசார் தகவல்..

மணலி குணசேகரன்(34) மீது முன் வழக்குகள் எதுவும் இல்லை போலீசார் விசாரணையில் தெரிய வந்தது இதனையடுத்து நான்கு பேர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

## தடையில்லா மின்சாராம் வழங்க வலியுறுத்தி திருவொற்றியூரில்

# மார்க்சிஸ்ட்கட்சியினர் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

சென்னை, நவ. 27–



சென்னை திருவொற்றியூர் மேற்கு பகுதியான 4,6,7 ஆகிய மூன்று வார்டுகளில் மின்சாரம் அடிக்கடி தடை ஏற்படுவதும், குறைந்த மின்அழுத்தம் வருவதால் இதனால் மின்சாதனங்கள் சேதமடைகின்றன.

இதை சரிபடுத்த கோரி திருவொற்றியூர் மேற்கு பகுதி மார்க்சிஸ்ட் கட்சியினர் மற்றும் மக்கள் நலச் சங்கங்கள் இணைந்து 200 க்கும் மேற்பட்டவர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தியபடி சத்தியமூர்த்திநகரில் இருந்து பேரணியாக சென்றனர்.

மின்சார வாரியத்தை கண்டித்து கோஷங்களை எழுப்பி ஜோதிநகர் மின்வாரிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஒன்றிய அரசின் நவீன தாரளமயக் கொள்கை சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மின்வாரியம் இரண்டு கழகங்களாக பிரித்துள்ளதால் தனியாருக்கு கொடுக்கப்பட்ட, ஒப்பந்தமுறை, அவுட்சோர்ஸ் நடைமுறைகளை தமிழ்நாட்டிலும் நடைமுறை படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதனால் காலிபணியிடங்கள் நிரப்ப படாமல் ஊழியர் இல்லாத நிலை உள்ளது. சாத்தங்காடு, எர்ணாவூர்(ஜோதிநகர்) மின் பகிர்மான அலுவலகங்களில் ஒரு ஆண்டுக்கு மேலாக உதவி பொறியாளர் இல்லாத நிலை நீடிக்கிறது. மின்பழுது புகார்களை கேட்பதற்கு அலுவலகத்தில் ஆட்கள் இல்லை என்றும் இதனால் இரவும் பகலும் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு பலமணிநேரம் மின்சாரம் இல்லமால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருவதாகவும், மேல்நிலை கம்பி வயர்களை மாற்றி வட கேபிள்களை அமைக்க வேண்டுமென்றே திருவொற்றியூர் மேற்கு பகுதி முழுவதும் மின் இணைப்பு பில்லர் கேபிள்கள் பாதுகாப்பற்று உள்ளதை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி குற்றச்சாட்டுகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# "டெல்லியில் 50,000 பேர் வேலையை இழப்போம்" ஆளுநர் மற்றும் அரசுக்கு பைக் டாக்சி ஓட்டுநர்கள் கடிதம்

புது டெல்லி, நவ. 27–



தலைநகர் டெல்லியில் காற்று மாசை தடுக்கும் நோக்கில் பயணிகளுக்கு பைக் டாக்சி சேவை வழங்கும் நிறுவனங்கள் மின்சார இருசக்கர வாகனங்களுக்கு மாறுவதை கட்டாயமாக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது ஆம் ஆத்மி அரசு. இதற்கு டெல்லி ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.இதனால் பைக் டாக்சி சேவையை நம்பி வாழ்வாதாரத்தை ஈட்டி வரும் சுமார் 50,000 பேர் வேலைவாய்ப்பை இழக்க நேரிடும் என பைக்டாக்சி ஓட்டுநர்கள் தரப்பில் ஆளுநர் மற்றும் ஆம்ஆத்மி அரசுக்குகடிதம் எழுதப்பட்டுள்ளது.

"பெட்ரோல் பைக் ஓட்டி வரும் சாமானிய நபரால் திடீரென எப்படி எலக்ட்ரிக் பைக்குக்கு மாற முடியும்? சந்தையில் எலக்ட்ரிக் பைக்குகள் இல்லை. அதே போல அவற்றை வாங்குவதற்கு எங்களிடம் பணமும் இல்லை" என அந்தக் கடிதத்தில் அப்னா பைக் டாக்சி சங்கம் தெரிவித்துள்ளது. தங்களது கோரிக்கை தொடர்பாக பலமுறை அரசு தரப்பை அணுகியும் அது கேட்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, கடந்த மாதம் இருசக்கர வாகனத்தை கொண்டு உணவு மற்றும் பொருட்கள் டெலிவரி செய்யும் சேவையில் ஈடுபட்டு வரும் நபர்கள் மின்சார இருசக்கர வாகனத்துக்கு மாறுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே காலக்கெடுவை தங்களுக்கும் வழங்க வேண்டும் என பைக் டாக்சி ஓட்டுநர்கள் தெரிவித்திருந்தனர். காற்று மாசை குறைக்கும் அரசின் நோக்கத்தை வரவேற்கிறோம். அதே நேரத்தில் பைக் டாக்சி ஓட்டுநர்கள் மின்சார இருசக்கர வாகனங்களை மட்டுமே இயக்க வேண்டுமென்ற கடுமையான விதிமுறை, தங்கள் வாழ்வாதாரத்தை பறிக்கும் செயல் என தெரிவித்துள்ளனர்.

மின்சார இருசக்கர வாகனத்துக்கு பைக் டாக்சி ஓட்டுநர்கள் மாறும் அரசின் கொள்கை அளவிலான முடிவை கெஜ்ரிவால் தலைமையிலான அரசு கொண்டு வந்தது. கடந்த வெள்ளிக்கிழமை டெல்லி ஆளுநர் இதற்கு அனுமதி வழங்கினார். விரைவில் இது நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்று முதல் டிச., 1 வரை மழை

சென்னை , நவ.27–



தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதை ஒட்டியுள்ள, தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில், நாளை (இன்று) ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன் இயக்குனர் செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில், 29ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறலாம். கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று(நேற்று) முதல் டிச., 1வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.

சென்னையில் அடுத்த 24 மணி நேரத்திற்கு, வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், இடி, மின்னலுடன் கூடிய, லேசான அல்லது மிதமான மழை பெய்யும்.

நாளை (இன்று) தெற்கு அந்தமான் மற்றும் அதையொட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில், சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ., வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ., வேகத்திலும் வீசக்கூடும். வரும், 28 மற்றும் 29ம் தேதிகளில், தென் கிழக்கு வங்கக் கடல், அதை ஒட்டிய அந்தமான் கடல் பகுதிகளில், சூறாவளி காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ., வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ., வேகத்திலும் வீசக்கூடும்.


இந்நாட்களில், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். ஆழ்கடலில் உள்ள மீனவர்கள், 28ம் தேதிக்குள் கரைக்கு திரும்ப வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தி.மு.க. இளைஞரணியின் இருசக்கர வாகன பேரணி

# பேண்ட் வாத்தியங்கள் முழங்க மலர் தூவி மாலை அணிவித்து வரவேற்பு அளித்த திமுகவினர்

சென்னை, நவ.27–



தி.மு.க இளைஞரணியின் 2–வது மாநில மாநாடு அடுத்த மாதம் 17–ந்தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. இளைஞர் அணி மாநில மாநாட்டை ஒட்டி இருசக்கர வாகன பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கன்னியாகுமரியில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.இளைஞரணியின் புல்லட் இருசக்கர வாகன பேரணி நடைபெற்று வருகிறது. சென்னை ஆர்கே நகர் தொகுதிக்குட்பட்ட காசிமேடு புது வண்ணாரப்பேட்டை தண்டையார்பேட்டை கொருக்குப்பேட்டை வழியாகவந்த இருசக்கர வாகனபேரணிக்குதி.மு.க. கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தி.மு.க இளைஞரணி இருசக்கர வாகன பேரணியில் ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜேஜே எபினேசர் ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகன பேரணியை காசிமேட்டில் துவக்கி வைத்தார்.

புதுவண்ணாரப் பேட்டைவ.உசிநகர்மற்றும் தண்டையார்பேட்டை மணலி சாலை ஆர்கேநகர் காவல் நிலையம் அருகே வந்த புல்லட் இருசக்கர வாகனபேரணியை பகுதி செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன்,சேர்மேன் நேதாஜி யூ கணேசன், லட்சுமணன் மற்றும் திமுக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேண்ட் வாத்திய முழங்க மாலை அணிவித்து மலர் தூவி பரிசுகளை வழங்கி உற்சாகமாகவரவேற்றனர்

# "காவிரி நீர் இல்லாததால் நெல் கொள்முதல் 3 லட்சம் டன் குறைந்துள்ளது": அண்ணாமலை குற்றச்சாட்டு



தஞ்சாவூர் : நவ. 27, டெல்டா மாவட்டங்களில் காவிரி நீர் வரத்து இல்லாததால், நெல்கொள்முதல்3லட்சம் டன்குறைந்துவிட்டதுஎன பாஜக மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழகம் முழுவதும் "என் மண் என் மக்கள் நடைப்பயணம் மேற்கொள்ளும் அண்ணாமலைதஞ்சாவூர் மாவட்டத்துக்கு நேற்று காலை வந்தார். திருவையாறு தொகுதிக்கு உட்பட்ட நடுக்காவிரியில் நடைப்பயணத்தை தொடங்கிய அவர் செய்தியாளர்களிடம் கூறியது: "டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் 8-ம் தேதி வரை 8.25 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நிகழாண்டு இதே காலகட்டத்தில் 3 லட்சம் டன் குறைந்து, 5.25 லட்சம் டன் மட்டுமேகொள்முதல் செய்யப்பட்டுள்ளது. காவிரியில் தண்ணீர் இல்லாததால் மகசூல் குறைந்து, கொள்முதல் குறியீடும்குறைந்துவிட்டது. காவிரியில் தண்ணீர் வராவிட்டால், என்னவாகும் என்பதற்கு இந்தஒரு ஆண்டு குறியீடே சாட்சி.

இந்தப் பகுதியில் மீத்தேன், நிலக்கரிபோன்ற திட்டங்கள் வரக்கூடாது என்பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது. ஆனால் தமிழக அரசு டெல்டா பகுதி மக்களை வஞ்சிக்கிறது. இந்தியா கூட்டணியில் திமுக இடம் பெற்றுள்ள நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெங்களூரு கூட்டத்துக்கு சென்றுவிட்டு காவிரி குறித்து வாயைத் திறக்காமல் வந்தார். மாநில அரசு காவிரியில் தண்ணீரைப் பெற்றுத் தராததால், கொள்முதல் குறியீடு குறைந்துவிட்டது.

கடந்த 1924-ம் ஆண்டு போடப்பட்ட காவிரி ஒப்பந்தத்தை 1974-ம் ஆண்டு கருணாநிதி புதுப்பிக்கத் தவறினார். இதனால் கர்நாடகத்தில் ஹேமாவதி, கபினி என வரிசையாக அணை கட்டப்பட்டது. எனவே, கடந்த 80 ஆண்டுகளாக காவிரியில் அரசியல் காரணங்களுக்காகநிறைய விஷயங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டன. இதனால் காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்து, தரிசு நிலம் அதிகமாகிவிட்டது.

காவிரியில் கடந்த 1974-ம் ஆண்டு முதல் தொடர்ந்து நம்முடைய உரிமைகள் விட்டுக் கொடுக்கப்பட்டன. இதனால், காவிரியில் வரக்கூடிய தண்ணீரின் அளவு குறைந்து, நிகழாண்டு நெல் கொள்முதல் 3 லட்சம் டன் குறைந்துவிட்டது" என்று அவர் கூறினார். இந்த சந்திப்பின் போது, பாஜக மாநிலப் பொதுச் செயலர் கருப்பு எம். முருகானந்தம், விவசாய அணி மாநிலப் பொதுச் செயலர் பூண்டி எஸ். வெங்கடேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

முன்னதாக, நடுக்காவேரி குடமுருட்டி ஆற்றில் மலர் தூவி ஆரத்தி எடுத்து வழிபட்டார். பின்னர்கருப்பூரில்வயலில் பெண்கள் நடவு செய்து கொண்டிருந்ததைப் பார்த்தார். அவர்களுடன் அண்ணாமலையும் வயலில் இறங்கி நாற்றங்கால்களை நடவு செய்தார்.

# "மக்களவைத் தேர்தல் வெற்றிக்கு சேலம் இளைஞரணி மாநாடு அடித்தளம் அமைக்கும்": அமைச்சர் கே.என்.நேரு பேட்டி



சென்னை, நவ. 27-

மக்களவைத் தேர்தலுக்கான பணிகளை 6 மாதத்துக்கு முன்பே தொடங்கிவிட்டோம். மக்களவைத் தேர்தல் வெற்றிக்கு சேலத்தில் நடைபெறவுள்ள திமுக இளைஞரணி மாநாடு அடித்தளம் அமைக்கும்" என்று அமைச்சர்கே.என். நேரு கூறியுள்ளார்.

சென்னை தியாகராயநகரில் உள்ள தனியார் ஓட்டலில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின்தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின்னர், அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கான பணிகளை, 6 மாதங்களுக்கு முன்பே திமுக சார்பில் தொடங்கப்பட்டு விட்டது.

தமிழகம் முழுவதும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மண்டல வாரியாக பயிற்சி பாசறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 5 மண்டலங்களில் மிகப் பெரிய மாநாடுகளைப் போல, கூட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள், உறுப்பினர்களின் அடுத்தக்கட்ட பணிகள் குறித்து இந்தக் கூட்டத்தில், மாவட்டச் செயலாளர்களுக்கு கூறப்பட்டது.

தேர்தல் எப்போது வந்தாலும், அதனை சந்திக்கக்கூடிய அளவுக்கு தயாராக இருக்க வேண்டும் என்று, முதல்வர் ஸ்டாலின் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். எங்களது அடுத்த முக்கியமான பணி, சேலத்தில் நடைபெறக்கூடிய மாநில இளைஞரணி மாநாட்டை, சிறப்பாக நடத்துவது. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை தலைவர் கூட்டியதற்கான முக்கிய நோக்கமே இதுதான். திமுக மாநாடு நடக்கிறது என்றால், அதன் எழுச்சி தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்கும்.

அமைச்சர் உதயநிதி, இளைஞரணி செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, ஏராளமான இளைஞர்கள் கட்சியை நோக்கி ஈர்க்கப்பட்டு வருகின்றனர். அவர் பயணிக்கும் ஊர்களில் இருந்து புதிய இளைஞர்கள் கட்சியை நோக்கி வருகின்றனர். திமுக அரசும்இளைஞர்களுக்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டி வருகிறது. இந்த இளைய பட்டாளத்தை, கட்டுக்கோப்பாகவும், திராவிடக்கொள்கையில் பற்றுக்கொண்டவர்களாகவும் மாற்றுவதற்காகத்தான், இளைஞரணி மாநாட்டை நடத்த முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

முதல்வர் இளைஞரணி செயலாளராக இருந்தபோது, கட்சியின் முதல் இளைஞரணி மாநில மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. 2-வது மாநில மாநாடு வருகிற டிச.17ம் தேதி சேலத்தில் நடைபெறுகிறது. இது ஒருநாள் மாநாடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உதயநிதி தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக நான் பல்வேறு பணிகளை செய்து வருகிறேன். மாநாடு நடைபெறும் நாளன்று, காலை 9 மணியளவில், கட்சியின் இருவண்ணக்கொடியை கட்சியின் மகளிரணி செயலாளர் கனிமொழி எம்.பி., ஏற்றி வைக்கிறார்.

மாணவரணி செயலாளர் எழிலரசன் மாநாட்டைத் திடலைத் திறந்து வைக்கிறார். முக்கியப்பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர். மாநாட்டில் கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் மாலை 6 மணிக்கு சிறப்புரை ஆற்றுகிறார். இந்த இளைஞரணி மாநாடு, கட்சியின் வரலாற்றில் மட்டுமல்ல, தமிழகமற்றும் இந்திய வரலாற்றிலும் முக்கிய மாநாடாக அமையப்போகிறது. வரவிருக்கின்ற, மக்களவைத் தேர்தல் வெற்றிக்கு, சேலத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு அடித்தளம் அமைக்கும் மாநாடாக அமையும். கிட்டத்தட்ட 5 லட்சம் இளைஞர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

# "காமராசர் பல்கலை. நிதி நெருக்கடிக்கு தமிழக அரசு தீர்வு காண வேண்டும்" – அன்புமணி வலியுறுத்தல்



சென்னை : நவ. 27, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிலவும் கடுமையான நிதிநெருக்கடி காரணமாக அங்கு பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம், அவர்களின் வாழ்விணையர் களுக்கான குடும்ப ஓய்வூதியம் ஆகியவை உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த நிலையில், இந்த நிதி நெருக்கடிக்கு தமிழக அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் இது குறித்து வெளியிட்டுருக்கும் அறிக்கையில், "மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிலவும் கடுமையான நிதிநெருக்கடி காரணமாக அங்கு பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம், அவர்களின் வாழ்விணையர் களுக்கான குடும்ப ஓய்வூதியம் ஆகியவை உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கல்வி வளர்ச்சியையே நோக்கமாக கொண்ட காமராசரால் உருவாக்கப்பட்டு, பின்னாளில் அவரது பெயர் சூட்டப்பட்ட பல்கலைக்கழகத்தில் சேவை செய்துஓய்வுபெற்றவர்களுக்கு உரிய காலத்தில் ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருப்பதை நியாயப்படுத்த முடியாது.

ஓய்வூதியம் உரிய காலத்தில் கிடைக்காததால் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பல நேரங்களில் தங்களுக்கான மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளவும், மருந்து, மாத்திரைகளை வாங்கவும் கூட பணம் இல்லாமல் தவிப்பதாக அவர்கள் தெரிவிக்கும் செய்திகள் கவலையை ஏற்படுத்துகின்றன. காமராசர் பல்கலைக்கழகத்திற்கு 35 ஆண்டுகளாக உழைத்தவர்களுக்கு, உரிய காலத்தில் ஓய்வூதியம் வழங்குவதுதான் அவர்களுக்கு செய்யப்படும் நன்றிக்கடன். காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் என மொத்தம் 400க்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர். ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் என சுமார் 1000 பேர் உள்ளனர். அவர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க மாதம் ரூ.10.50 கோடி தேவைப்படும் நிலையில், அதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தால் ஏற்பாடு செய்ய முடியாதது தான் இந்த நிலைக்கு காரணம். பல்கலைக்கழகத்தின் அவசரத் தேவைகளுக்காக வைக்கப்பட்டிருந்த மூலதன நிதி ரூ.300 கோடி ஏற்கனவே செலவு செய்யப்பட்டு விட்ட நிலையில், பல்கலைக்கழக நிதி ஆதாரங்கள் அனைத்தும் வறண்டுவிட்டன. அரசு சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டால் மட்டுமே நிலைமையை சமாளிக்க முடியும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கடந்த காலங்களில் நிதியை கையாண்ட முறைகள் குறித்து ஆய்வு செய்த தணிக்கை அமைப்புகள், ஒட்டுமொத்தமாக 5 தணிக்கை ஆட்சேபனைகளை தெரிவித்துள்ளன. அவற்றுக்கு பல்கலைக்கழகம் சரியான விளக்கம் அளிக்காததால் அரசு நிதி அளிக்கவில்லை. இதே நிலை தொடரக்கூடாது. மதுரை காமராசர் பல்கலைக்கழக ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழகத்தின் நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேவையான அளவு நிதியை ஒதுக்க தமிழக அரசு முன்வர வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# காரைக்குடியில் வெறிநாய் கடித்து 5 பேர் மருத்துவமனையில் அனுமதி

காரைக்குடி : நவ. 27, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்களை விரட்டி விரட்டி வெறிநாய் கடித்ததில் 5 பேர் ரத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் கடந்த சில மாதங்களாக பல்வேறு இடங்களிலும் தெரு நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். சென்னையில் ரேபிஸ் நோய்த் தொற்றுடன் சுற்றி திரிந்த தெரு நாய் ஒன்று அடுத்தடுத்து 27 பேரை கடித்து காயப்படுத்திய சம்பவம், மாநிலம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

பல இடங்களில் சிறுவர்கள் மற்றும் முதியவர்களை தெரு நாய்கள் கடித்துக் குதறிய சம்பவங்கள் தொடர்கதையாகமாறிவிட்ட நிலையில், தெருநாய்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்எனபொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கல்லூரி சாலையில் நேற்று காலை நடைபயிற்சியில் பலர் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு சுற்றித்திரிந்த வெறிநாய் ஒன்று திடீரென அங்கிருந்தவர்களை விரட்டி விரட்டி கடிக்கத் தொடங்கியது. இதில் 5 பேருக்கு ரத்த காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் உடனடியாக காரைக்குடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கடிபட்ட அனைவருக்கும் வெறிநாய் கடிக்கான தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதனிடையே தொடர்ந்து அதிகரித்து வரும் தெரு நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டம், போலுப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி அரங்கில் மாவட்ட பள்ளிக் கல்வித்துறை மற்றும் கல்வியாளர்கள் சங்கமம் இணைந்து நாணயம் கண்காட்சி, தொல்லியல் கண்காட்சி, கல்விக் கண்காட்சி முப்பெரும் விழாவை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து உரையாற்றினார்.

# பெங்களூருவில் முதல் முறையாக கம்பாளா போட்டி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்



பெங்களூரு : நவ. 27, கம்பாளா போட்டி பெங்களூருவில் முதல் முறையாக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதனை காண 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்வத்தோடு குவிந்தனர்.

கர்நாடக மாநிலத்தில் மங்களூரு, உடுப்பி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் துளு மொழி பேசும் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். துளு மக்கள் 500 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரிய விளையாட்டான கம்பாளா போட்டியை நெல் அறுவடை முடிந்த பின்னர் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு வெளியான 'கந்தாரா' என்ற கன்னட திரைப்படத்தின் வாயிலாக இந்த விளையாட்டு உலகமெங்கும் சென்றடைந்தது.

கடலோர பகுதிகளில் மட்டுமே நடந்து வந்த கம்பாளா போட்டியை பெங்களூருவில் நடத்த வேண்டும் என கம்பாளா ஆர்வலர்கள் கோரி வந்தனர். இதையடுத்து முதல்வர் சித்தராமையா நவம்பர் 25, 26 ஆகிய தேதிகளில் பெங்களூருவில் நடத்த அனுமதி வழங்கினார்.

பெங்களூருவில் உள்ள அரண்மனை மைதானத்தில் பந்தயம் நடத்துவதற்காக பெரும் செயற்கை வயல்கள் உருவாக்கப்பட்டன. பரிசளிப்பு விழா நடைபெறும் மேடைக்கு மறைந்த கன்னட நடிகர் புனித் ராஜ் குமாரின் பெயர் சூட்டப்பட்டது. கர்நாடக முன்னாள் முதல்வர்கள் எடியூரப்பா, சதானந்தகவுடா ஆகியோர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் தீபாரதனை செய்து கம்பாளா போட்டியை தொடங்கி வைத்தனர். இதைத்தொடர்ந்து 50-க்கும் மேற்பட்ட எருமை காளைகள் கம்பாளா போட்டியில் பங்கேற்றன. மாலையில் வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு முதல்வர் சித்தராமையா பரிசு வழங்கினார்.

பின்னர் அவர் பேசுகையில், "பெங்களூருவில் கம்பாளா போட்டி நடத்தியதன் மூலம் கடலோர கர்நாடகாவின் பாரம்பரிய கலை உலகமெங்கும் பரவ வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த கலையின் வாயிலாக கடலோர கர்நாடக மக்களின் பண்பாட்டை பிறமொழியினரும் அறிந்துகொள்வார்கள்" என்றார்.

# பிரபல பாடகி இசை நிகழ்ச்சியில் நெரிசல் கேரள பல்கலை.யில் 4 மாணவர்கள் உயிரிழப்பு



கொச்சி, நவ. 27-

கேரள மாநிலம், கொச்சி பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 2 மாணவிகள், 2 மாணவர்கள் உயிரிழந்தனர். 64 பேர் காயமடைந்தனர். அவர்களில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டம் களமசேரியில் கொச்சிபல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டு விழாவை ஒட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமைஇரவுஇசைக் கச்சேரி நடைபெற்றது. பிரபல பின்னணி பாடகி நிகிதா காந்தி பங்கேற்று இசைக் கச்சேரியை நடத்தினார். திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இசைக் கச்சேரியை ரசிக்க ஏராளமான மாணவ, மாணவியர் குவிந்தனர். அரங்கம் நிரம்பியதால் வெளியே நின்றிருந்த மாணவ, மாணவியருக்கு அனுமதிமறுக்கப்பட்டது.

ஆனால் அவர்கள் முண்டியடித்து முன்னேறியதால் கூட்ட நெரிசல்ஏற்பட்டது. இதில் 2 மாணவிகள், 2 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 64-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் களமசேரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனறு சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

# விசா இல்லாமல் வருவதற்கு 6 நாடுகளுக்கு அனுமதி சீனா அறிவிப்பு



புதுடெல்லி , நவ. 27-

பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின் மற்றும் மலேசியா ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் விசா இல்லாமல் தங்கள் நாட்டிற்குள் நுழைய சீனா அனுமதி வழங்க உள்ளது.

டிசம்பர் 1-ம் தேதியிலிருந்து பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், மலேசியா ஆகிய 6 நாட்டு குடிமக்களும் விசா இல்லாமல் தங்கள் நாட்டிற்குள் நுழைய சீனா அனுமதி வழங்கி உள்ளது. சோதனை முயற்சியாக 1 வருட காலத்திற்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் விசா இல்லாமல் சீனா வருபவர்கள் 15 நாட்கள் வரை தங்கிக் கொள்ளலாம் என சீனா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, "சீனாவின் உயர்தர வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு" உதவும் என்று செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்தார்.

கரோனா தொற்றுநோய்க்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான சர்வதேச பார்வையாளர்கள் சீனாவிற்கு வந்து செல்வது வழக்கம். முன்னதாக இலங்கை உள்பட சில நாடுகள் விசா இல்லாமல் குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் மட்டும் வரலாம் என அறிவித்துள்ளது கவனிக்கத்தக்கது .



தென்காசி மாவட்டம்- குற்றாலத்தில் மாணவர் அணி சார்பில் கருத்தியல் கருத்தரங்கத்திற்கு வருகை புரிந்த நீலகிரி மாவட்ட எம்பியும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான ஆ.ராஜாவிற்கு தென்காசி தெற்கு மாவட்ட கழக திமுக செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கடையநல்லூர் நகர செயலாளர் எஸ். அப்பாஸ் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில்1-வது வார்டுசெயலாளர் காளிமுத்து, மஜீத், மாறன், பைசல், அப்பாஸ், மற்றும் மாவட்டகழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், நகரக் கழக, ஒன்றிய கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு வரவேற்பு அளிக்கப்பட்டது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## விஜய் ஹசாரே கோப்பை :
# தமிழக அணி வீரர் சாய் சுதர்ஷன் அபாரம்



**தாணே : நவ. 27,**

**விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியின் குருப் இ பிரிவு லீக் ஆட்டத்தில் தமிழ்நாடு அணி 33 ரன்கள் வித்தியாசத்தில் கோவா அணியை வீழ்த்தியது.**

இந்தப் போட்டி மகாராஷ்டிர மாநிலம் தாணேவிலுள்ள தாதோஜி கோன்டேவ் மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய தமிழ்நாடு அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 296 ரன்கள் குவித்தது.

தமிழக அணியின் சாய் சுதர்ஷன் அபாரமாக ஆடி 125 ரன்கள்(144 பந்துகள், 10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) குவித்தார். என்.ஜெகதீசன் 2, சாய் கிஷோர் 3, அபராஜித் 40, விஜய் சங்கர் 24,இந்திரஜித் 24, தினேஷ் கார்த்திக் 47, ஷாருக் கான் 9, சக்கரவர்த்தி 4 ரன்கள் எடுத்தனர்.பின்னர் விளையாடிய கோவா அணி50 ஓவர்களில் 263 ரன்களுக்கு ஆட்டமிழந்து 33 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. கோவா அணியில் அதிகபட்சமாக கிருஷ்ணமூர்த்தி சித்தார்த் 61 ரன்கள் எடுத்தார்.

தமிழக அணி தரப்பில் சந்தீப் வாரியர் 4, ரவிஸ்ரீநிவாசன் சாய் கிஷோர், பாபா அபராஜித் ஆகியோர் தலா 2, டி.நடராஜன், சாய் சுதர்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

# "பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்காக வெளிநாட்டில் பயிற்சி" – நீரஜ் சோப்ரா



**பானிபத் : நவ. 27,**

**அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகும் வகையில் வெளிநாட்டுக்குச் சென்று பயிற்சி மேற்கொள்ள உள்ளதாக இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 'ஒலிம்பிக் - 2024' தொடர் நடைபெற உள்ளது. இதில் உலக நாடுகளை சேர்ந்த சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்று விளையாட உள்ளனர். இந்த சூழலில் ஈட்டி எறிதலில் உலக சாம்பியானகவும், டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கமும் வென்ற நீரஜ் சோப்ரா, பாரிஸ் ஒலிம்பிக் குறித்து பேசியுள்ளார்.

"பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான எனது பயிற்சியை தொடங்க உள்ளேன். அதற்காக நான் வெளிநாடு செல்கிறேன். நாட்டுக்காக பதக்கம் வெல்ல நூறு சதவீதம் களத்தில் எனது முயற்சியை கொடுப்பேன்" என நீரஜ் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்திய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் முந்தைய ஒலிம்பிக் தொடரை காட்டிலும் கூடுதலாக பதக்கம் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு தேவைப்படும் முறையான பயிற்சியை வீரர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அரசு தரப்பிலும் அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

# யு–17 டேபிள் டென்னிஸ் தமிழக வீரர் பாலமுருகன் சாம்பியன்



**வதோதரா : நவ, 27,**

**17 வயதுக்கு உட்பட்டோருக்கான யுடிடி தேசிய தரவரிசை டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள சாமா உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் தமிழகத்தின் பாலமுருகன், மகாராஷ்டிராவைச் சேர்ந்த குஷால் சோப்டாவை எதிர்த்து விளையாடினார்.**

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாலமுருகன் 11-6, 14-12, 11-8 என் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். தேசிய தரவரிசை டேபிள் டென்னிஸ் சாம்பியன் ஷிப்பில் பாலமுருகன் தொடர்ச்சியாக வென்றுள்ள 3-வது பட்டம் இதுவாகும்.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் மேற்கு வங்கத்தின் சிண்ட்ரலா தாஸ் சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் அவர், 11-2, 9-11, 11-5, 11-6 என்ற செட் கணக்கில் சகமாநிலத்தை சேர்ந்த சான்விராயை தோற்கடித்தார். சாம்பியன் பட்டம் வென்ற பாலமுருகன், சிண்ட்ரலா தாஸ் ஆகியோருக்கு தலா ரூ.24 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

# விபத்தில் சிக்கியவரை மீட்ட முகமது ஷமி பாராட்டை குவித்து வரும் ரசிகர்கள்



**நைனிடால் : நவ. 27,**

**உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடாலில் உள்ள மலைப்பாதை வழியாக சென்ற ஒரு கார் பள்ளத்தில் கவிழ்ந்தது.**

அப்பகுதி வழியாக வந்த இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி விபத்தைக் கண்டார். உடனடியாக அக்கம்பக்கத்தினரை அழைத்து பள்ளத்தில் சிக்கிய நபரை மீட்டு பத்திரமாக அனுப்பி வைத்தார்.

இதையடுத்து, முகமது ஷமி சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவரை மீட்டது குறித்து சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். இதுதொடர்பாக, ஷமி தனது இன்ஸ்டாகிராம் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி. கடவுள் அவருக்கு 2வது வாழ்க்கையை கொடுத்தார். அவரது கார் நைனிடால் அருகே மலைப்பாதையில் இருந்து எனது காருக்கு முன்னால் கீழே விழுந்தது. நாங்கள் அவரை மிகவும் பாதுகாப்பாக வெளியே எடுத்தோம் என பதிவிட்டுள்ளார். முகமது ஷமியின் இச்செயலுக்கு சமூக வலைதளங்களில் பலரும் தங்களது பாராட்டுதலைத் தெரிவித்து வருகின்றனர்.

# கிரிக்கெட்டை விட கபடி விளையாடுவது கடினம் சொல்வது முன்னாள் கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர்



**புதுடெல்லி : நவ. 27,**

**வருகிற 2-ந்தேதி ஆமதாபாத் நகரில் தொடங்க கூடிய கபடி போட்டி தொடரானது பெங்களூரு, புனே உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் நடைபெற உள்ளது.**

புரோகபடிலீக்போட்டிகளின் (பி.கே.எல்.) 10-வது சீசன் குஜராத்தின் ஆமதாபாத்நகரில் டிசம்பர் 2-ந் தேதி தொடங்க உள்ளது. இந்த போட்டிகளை காண ரசிகர்கள் ஆவலாக உள்ளனர். இந்நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர் இதுபற்றி பேசும்போது, மும்பையில் கபடி போட்டிகள் இரவில் நடத்தப்படும். இதனை நிறைய பேர் கண்டு ரசிப்பார்கள். நானும் கூட்டத்தோடு சேர்ந்து சென்று, போட்டிகளை காண்பது வழக்கம்.

இது ஒருவரை தொடுதல் வழியே விளையாட கூடிய, ஒரு தொடர்புடைய போட்டி. ஹெல்மெட் ஒன்றை அணிந்து கொண்டு வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ளும் கிரிக்கெட்டை விளையாடுவது என்பது கபடி போட்டியை விட எளிது என கண்டறிந்தேன். இந்த கபடி போட்டியை விளையாட ஒருவருக்கு வளைந்து கொடுக்கும் தன்மை, வலிமை மற்றும் திறமையாக செயல்படுதல் ஆகியவை அவசியம் என்று கூறியுள்ளார்.

வருகிற 2-ந்தேதி ஆமதாபாத் நகரில் தொடங்க கூடிய இந்த போட்டியானது பெங்களூரு, புனே உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் நடைபெற உள்ளது. சென்னையில், டிசம்பர் 22 முதல் 27 வரையிலான நாட்களில் போட்டிகள் நடைபெறும்.

# ஐபிஎல் 2024 : சென்னை அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட 8 வீரர்கள்

**சென்னை : நவ. 27,**

**அணிகள் தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் பட்டியல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

2024ம் ஆண்டு ஐபிஎல் தொடருக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 19ம் தேதி நடைபெற உள்ளது. ஏலத்திற்கு முன்பாக அணிகள் தங்களின் வீரர்களை பரிமாற்றிக்கொள்ளலாம். மேலும், வீரர்களை தங்கள் அணியில் இருந்து விடுவிக்கலாம். இந்த நிலையில் , அணிகள் தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் பட்டியல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை அணி 8 வீரர்களை விடுவித்துள்ளது. பென் ஸ்டோக்ஸ், டுவைன் பிரிட்டோரியஸ், பகத் வர்மா, சுப்ரான்ஷு சேனாபதி, அம்பதி ராயுடு, கைல் ஜேமிசன், ஆகாஷ் சிங், சிசண்டா மகலா ஆகிய 8 வீரர்களை சென்னை அணி விடுவித்துள்ளது. இதனால் கேப்டன் தோனி அடுத்த ஐபிஎல் தொடரில் விளையாடுவது உறுதியாகி உள்ளது.

வரலாறு சினிமா

# திகில் தொடரில் நடித்ததை மறக்க முடியாது : ஆர்யா



**சென்னை : நவ. 27,**

**அமேசான் பிரைம் வீடியோவில் வெளியாகும் தமிழ் திகில் தொடர், 'தி வில்லேஜ்'. இதில் ஹீரோவாக நடித்துள்ள ஆர்யா கூறியதாவது:**

'தி வில்லேஜ்' என்ற இத்தொடர் அதே பெயரில் அஸ்வின் ஸ்ரீவத்சங்கம், விவேக் ரங்காச்சாரி, ஷாமிக் தாஸ் குப்தா சேர்ந்து உருவாக்கிய கிராபிக்ஸ் ஹாரர் நாவலால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டது. தனது குடும்ப உறுப்பினர்களின் பின்னணியில் உள்ள மர்மத்தை அவிழ்க்க முயற்சிக்கும் மனிதனின் கதையை இத்தொடர் விவரிக்கிறது. முதல்முறையாக ஓடிடி தொடரில் நடித்துள்ளேன்.

கவுதம் என்ற கேரக்டரில் வரும் நான், கட்டியல் என்ற கிராமத்தில் வசிக்கும் உள்ளூர்வாசிகளுடன் சேர்ந்து, எனது குடும்பத்தினரை கண்டறியும் மீட்பு பணியில் ஈடுபடுகிறேன். இந்த தொடரில் நடித்தது நிஜமாகவே ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. கதையும், காட்சிகளும் அதிக சுவாரஸ்யம் கொண்டதாக இருப்பதை அறிந்தேன். இதுபோன்ற அம்சங்கள் என்னை இத்தொடரில் ஈடுபாட்டுடன் பணியாற்ற வைத்தது.

இந்தியாவின் ஓடிடி தளங்களில் காணப்படும் அனைத்து திகில் கதைகளில் இருந்து 'தி வில்லேஜ்' தொடர் தனித்துவமாக இருக்கும். பல நேரங்களில் திரைப்படங்களில் நாம் பார்க்கும் திகில், குறிப்பிட்ட எல்லையைக் கடந்ததும் தடை செய்யப்பட்டு விடும். இத்தொடரில் இயக்குனர் மிலிந்த் ராவ் அனைத்து அம்சங்களையும் வெளிப்படுத்தி இருக்கிறார். இதுபோன்ற ஜானரிலான உள்ளடக்கத்தை உருவாக்குவதில் படைப்பாளிகள் நம்புவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். ஏனெனில், நம் மக்கள் இந்த ஜானரிலான படைப்புகளை ஓடிடி தளங்களில் பார்த்து ரசிக்க பெரிதும் விரும்புகின்றனர் என்பது பொதுவான உண்மை.

# சமந்தா 2 பெண் குழந்தைகளை தந்தெடுக்கிறார்



**சென்னை : நவ. 27,**

**நடிகை சமந்தா, விரைவில் 2 பெண் குழங்தைகளை தத்தெடுத்து வளர்க்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

தமிழ், தெலுங்கு மொழிகளில் பிரபல நடிகையாக விளங்கிவரும் சமந்தா, சமீபத்தில் மயோசிட்டிஸ் நோயால் பாதிக்கப்பட்டார். இதனால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்று சிகிச்சை பெற்று வரும் சமந்தா, ஜிம்மில் வொர்க் அவுட் செய்யும் வீடியோக்களை அவ்வப்போது தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

இதனிடையே விஜய் தேவாரகொண்டாவுடன் தெலுங்கில் அவர் நடித்த 'குஷி' படத்திற்கு பிறகு புதிய படங்கள் குறித்து அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. இருப்பினும் ஏற்கனவே அவர் ஒப்புக்கொண்டிருந்த 'சென்னை ஸ்டோரீஸ்' என்ற ஆங்கிலப் படத்தில் மட்டும் அவர் நடித்து வருகிறார். கடந்த 2017ம் ஆண்டு நடிகர் நாக சைதன்யாவை காதலித்து திருமணம் செய்து கொண்ட சமந்தா, பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக 2021ல் அவரைப் பிரிந்தார்.

அதன் பிறகு அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. இருப்பினும் அவர் மீண்டும் திருமணம் செய்து கொள்ள இருப்பதாக பல்வேறு தரப்பிலிருந்து தகவல்கள் வெளியான போதும், அதை சமந்தா மறுத்துவந்தார். இந்நிலையில் பிரதியுஷா என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் சமந்தா பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். இந்த நிறுவனத்தின் மூலம் இரண்டு பெண் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்க சமந்தா திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த இரண்டு குழந்தைகளை வளர்க்கும் முடிவை அவர் எடுத்துள்ளதால், அவர் மீண்டும் திருமணம் செய்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை என கூறப்படுகிறது.

# கீர்த்தி சுரேஷ், ராதிகா ஆப்தே நடிக்கும் அக்கா



**மும்பை : நவ. 27,**

**பாலிவுட்டிலுள்ள யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்ட்ரீமிங் தயாரிப்பு பிரிவான ஒய்ஆர்எப் என்டர்டெயின்மெண்ட் தயாரிக்கும் புதிய இந்தி தொடர், 'அக்கா'.**

கடுமையான முறையில் பழிவாங்கும் கதை கொண்ட இதில் கீர்த்தி சுரேஷ், ராதிகா ஆப்தே நடிக்கின்றனர். எழுத்தாளர் தர்மராஜ் ஷெட்டி இயக்குகிறார். இத்தொடரின் தொலைநோக்குப் பார்வை ஆதித்யா சோப்ராவின் கவனத்தை அதிகமாக ஈர்த்தது.

ஒய்ஆர்எப் என்டர்டெயின்மெண்ட்டின் முதல் தொடர், 'தி ரயில்வே மேன்'. நெட்பிளிக்ஸில் வெளியான இதில் மாதவன், கே கே மேனன், திவ்யேந்து ஷர்மா, பாபில் கான் நடித்தனர். 1984 போபால் விஷவாயு சோக நிகழ்வில், வெளியே தெரியாத சிலருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தொடர் உருவானது. அடுத்த தொடர், 'மண்டேலா மர்டர்ஸ்'. பல சீசன்கள் கொண்ட கிரைம் திரில்லர் தொடரான இதில் வாணி கபூர், வைபவ் ராஜ் குப்தா, சுர்வீன் சாவ்லா, ஜமீல் கான் நடித்து வருகின்றனர்.

# நடிகை வனிதா மீது மர்ம நபர் தாக்குதல் 'பிக்பாஸ்' பிரதீப் ஆதரவாளர் என்று குற்றச்சாட்டு



**சென்னை : நவ. 27,**

**பிக்பாஸ் தொடர்பான பேட்டி ஒன்றை முடித்துவிட்டு செல்லும்போது தன் மீது மர்ம நபர் ஒருவர் தாக்குதல் நடத்தியதாக நடிகை வனிதா விஜயகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.**

பிக்பாஸ் நிகழ்ச்சியின் ஏழாவது சீசன் தற்போது ஒளிபரப்பாகி வருகிறது. இதில் நடிகையும் முன்னாள் பிக்பாஸ் போட்டியாளருமான வனிதா விஜயகுமாரின் மூத்த மகள் ஜோவிகா கலந்து கொண்டுள்ளார். தனது மகளுக்கு ஆதரவாக வனிதா தனது எக்ஸ் பக்கத்தில் தொடர்ந்து பதிவிட்டு வருகிறார். இதுதவிர தனியார் ஊடகங்களுக்கு பிக்பாஸ் நிகழ்ச்சி தொடர்பாக விமர்சனம் செய்து வருகிறார்.

இந்த நிலையில், தன்னை மர்ம நபர் ஒருவர் தாக்கிவிட்டதாக வனிதா தனது எக்ஸ் பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார். நள்ளிரவு 1 மணியளவில் பிக்பாஸ் நிகழ்ச்சியின் விமர்சனத்தை முடித்துவிட்டு தனது காரை எடுக்க சென்ற போது, அங்கு வந்த மர்ம நபர் 'ரெட் கார்டு கொடுக்குறீங்களா' என்று கேட்டு தன்னை கொடூரமாக தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடியதாக வனிதா அப்பதிவில் கூறியுள்ளார். மேலும் அந்த மர்ம நபரின் கோரமான சிரிப்பு தன் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பதாகவும், அவர் பிரதீப் ஆண்டனியின் ஆதரவாளர் என்றும் வனிதா பதிவிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதால், பிரதீப் ஆண்டனி பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். இது சமூக வலைதளங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து பிரதீப்புக்கு எதிராக தனது கருத்துகளை வனிதா சமூக வலைதளங்களில் முன்வைத்து வந்தார்.

# திரிஷா, குஷ்பு, சிரஞ்சீவி மீது வழக்கு மன்சூர் அலிகான் அதிரடி அறிவிப்பு



**சென்னை ; நவ. 27,**

**திரிஷா குறித்து அவதூறாக பேசிய விவகாரம் தொடர்பாக திரிஷா, குஷ்பி, சிரஞ்சீவி ஆகியோர் மீது மான நஷ்ட வழக்கு தொடர உள்ளதாக நடிகர் மன்சூர் அலிகான் அறிவித்துள்ளார்.**

சென்னையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் மன்சூர் அலிகான், நடிகை திரிஷா குறித்து அவதூறாக சில கருத்துக்களை தெரிவித்து இருந்தார். மன்சூர் அலிகான் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியதை அடுத்து, அவருக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

நடிகை திரிஷா இனி மன்சூர் அலிகான் நடிக்கும் திரைப்படங்களில் நடிக்கப் போவதில்லை என்று அறிவித்திருந்தார். திரிஷாவிற்கு ஆதரவாக இயக்குனர் லோகேஷ் கனகராஜ், நடிகை மாளவிகா மோகனன், தேசிய மகளிர் ஆணைய உறுப்பினரும் நடிகையுமான குஷ்பு, நடிகர் சிரஞ்சீவி ஆகியோர், மன்சூர் அலிகானுக்கு கண்டனம் தெரிவித்து கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் தான் பேசியது தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாகவும் இருப்பினும் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் மன்சூர் அலிகான் அறிவித்திருந்தார். இதை ஏற்று, மன்னிப்பது மனித மாண்பு எனக் கூறி திரிஷாவும் பதில் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் இது தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், போலீஸார் மன்சூர் அலிகானை நேரில் அழைத்து விசாரணை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் நடிகைகள் திரிஷா, குஷ்பு மற்றும் நடிகர் சிரஞ்சீவி ஆகியோர் மீது மான நஷ்aட வழக்கு தொடர் உள்ளதாக நடிகர் மன்சூர் அலிகான் அறிவித்துள்ளார்.

தான் பேசிய முழு வீடியோவையும் வெளியிட்டுள்ள அவர், அரசியல் குறித்தும், சினிமா குறித்தும் மட்டுமே தான் அந்த செய்தியாளர் சந்திப்பில் பேசியதாகவும், ஆனால் திரிஷா குறித்து மட்டும் பேசிய வீடியோவை எடிட் செய்து தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில விஷமிகள் ஈடுபட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பேசிய நபர்கள் மீது மான நஷ்ட வழக்கு மற்றும் பொது அமைதிக்கு களங்கம் விளைவிக்கும் பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர உள்ளதாக மன்சூர் அலிகான் தெரிவித்துள்ளார்.



வரலாறு உலகம்

# பிணைக் கைதிகளை விடுவிப்பதில் தாமதம்

## ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக ஹமாஸ் குற்றச்சாட்டு



**டெல் அவிவ் : நவ. 27,**

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும் மற்றும் காசா மக்களுக்கு தேவையான அடிப்படை உதவிகள், இஸ்ரேலில் சிறையில் உள்ள பாலஸ்தீனியர்களை விடுவிப்பது என இரு தரப்புக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்த சூழலில் பிணைக் கைதிகளை ஒப்பந்தத்தின் படி இரண்டாவது நாளன்று விடுவிப்பதில்ஹமாஸ்தாமதம் காட்டி வருவதாக தகவல். ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறி உள்ளதாக குற்றச்சாட்டு வைத்துள்ளது ஹமாஸ். அதுவேதாமதத்துக்குகாரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேவின் ஆலோசகர் தாஹிர் அல்-நோநோ தெரிவித்துள்ளார். வடக்கு இஸ்ரேல் பகுதிக்கு வேண்டிய உதவிகளை இஸ்ரேல் விநியோகிக்காமல் உள்ளது என்றும், சிறையில் நீண்ட கால தண்டனையில் உள்ள கைதிகளை விடுவிக்க மறுப்பதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது. ஆனால், இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது இஸ்ரேல்.

ஒப்பந்தத்தின் படி 200 லாரிகளில் உதவி பொருட்கள் காசாவுக்கு சென்றுள்ளதாகவும். அதில் 50 வடக்கு காசாவுக்கு சென்றடைந்துஉள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் வடக்கு காசாவுக்கு திரும்ப முயன்ற மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி உள்ளதாகவும். இதில் 2 பேர் உயிரிழந்து உள்ளதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் 7-ம் தேதி ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினரை ஹமாஸ் தீவிரவாதிகள் சிறைபிடித்து சென்றனர். இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்குதலை தொடர்ந்து அவர்கள் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இந்த சூழலில் இரு தரப்புக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் போடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் இஸ்ரேலியர்கள் மட்டுமல்லாது பிணைக் கைதிகளாக ஹமாஸ் வசம் உள்ள அமெரிக்க நாட்டு மக்களும் விடுவிக்கப்படலாம் என அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி முதல் நாளன்று சுமார் 24 பேரை விடுவித்தது ஹமாஸ். மேற்கொண்டு 14 பிணைக் கைதிகளை இரண்டாம் நாள் விடுவிக்கப்பட இருந்தனர்.

# இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனர்கள் நிம்மதியாக வாழ்வதை ஹமாஸ் ஏற்றுக்கொள்ளவில்லை – ஜோ பைடன்



**அமெரிக்கா : நவ. 27,**

**இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனர்கள் அருகருகே நிம்மதியாக வாழ்வதை ஏற்றுக்கொள்ளாத ஹமாஸ்தான் இந்த தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் மத்தியிலான போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, கத்தார் நாடு இரு தரப்பிடமும் நடத்திய பேச்சுவார்த்தையில், நான்கு நாள்கள் போர் இடைநிறுத்த ஒப்பந்தத்தின்பேரில், 50 பிணைக்கைதிகளை விடுவிக்க ஹமாஸும், 150 பாலஸ்தீன சிறைவாசிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக்கொண்டன. இந்த ஒப்பந்தத்தின்அடிப்படையில், இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 39 பாலஸ்தீனப் பெண்கள் மற்றும்இளைஞர்கள்மேற்குக் கரையிலுள்ள ரமல்லாவுக்கு அருகே பெய்துனியா சோதனைச்சாவடியில் விடுவிக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஹமாஸ், 13 இஸ்ரேலியர்கள் உட்பட24பிணைக்கைதிகளை விடுவித்திருக்கிறது. அவர்கள் எகிப்து வழியாக இஸ்ரேலை அடைந்துள்ளனர். இந்த நிலையில், அமெரிக்க அதிபர் ஜோபைடன், அமெரிக்காவின் மசாசூசெட்ஸில் உள்ள நன்டக்கெட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், ‘‘இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்ஒருபகுதியாக, 24 பிணைக்கைதிகளை விடுவித்ததை வரவேற்கிறேன். இது ஒரு நேர்மறையான தொடக்கம்.

ஹமாஸ் குழு இந்த நம்பிக்கையைச் சரியாகக் காப்பாற்றும் என்று தோன்றவில்லை. இது ஆரம்பம் மட்டுமே, ஆனால் இதுவரை, நன்றாகவே அனைத்தும் நடந்திருக்கிறது. தற்போது உலகளவில் ஹமாஸ் குழுவுக்கு ஏற்பட்டிருக்கும் அழுத்தங்களுக்கு, இந்த விடுவிப்பின் மூலம் பதிலளிப்பதாக மட்டுமே நான் நம்புகிறேன். விடுவிக்கப்பட்டவர்களில் ஹமாஸிடம் பிணைக்கைதிகளாக இருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட மூன்று அமெரிக்கக் குடிமக்களும் இருப்பார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால், அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களை மீட்டு அவர்களின் குடும்பத்தாருடன் நிச்சயம் சேர்ப்பேன். விடுவிக்கப்படும் இரண்டாவது பிணைக்கைதிகளின் பட்டியலில் மூன்று அமெரிக்கக் குடிமக்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் என்றே கருதுகிறேன். இவர்களைத் தவிரக் கணக்கில் வராத 10 அமெரிக்கர்களின் கதி, அவர்களின் நிலைமைகள் குறித்து எங்களுக்குத் எந்தத் தகவலும் தெரியவில்லை.

நீண்டகால அடிப்படையில் மத்தியக் கிழக்கில் அமைதியை ஏற்படுத்த இரு நாடுகளின் ஒத்துழைப்புத் தீர்வு தேவை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இஸ்ரேலியர்களும் பாலஸ்தீனர்களும்அருகருகே வாழக்கூடிய வாழ்வைத் தொடர வேண்டும். இரண்டு நாடுகளுக்கும் சம அளவு சுதந்திரம், கண்ணியத்துடன் தீர்வு காணவேண்டும். இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனர்கள் அருகருகே நிம்மதியாக வாழ்வதை ஏற்றுக்கொள்ளாத ஹமாஸ்தான் இந்த தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது” எனத் தெரிவித்தார்.

# ஆஸ்திரியாவில் சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலி



**ஆஸ்திரியா : நவ. 27,**

**விபத்து குறித்து ஆஸ்திரிய போலீசார் விசாரணை நடத்திவருகின்றனர்.**

மேற்கு ஆஸ்திரியாவில் க்ரூனாவ் இம் அல்ம்டல் பகுதியில்சிறியரகவிமானம் விபத்துக்குள்ளானதில் நான்குபேர் உயிரிழந்ததாக ஆஸ்திரிய போலீசார் தெரிவித்தனர். கடும் பனிப்பொழிவான மலைப்பகுதியில் விமானத்தின் பாகங்கள் சிதறிக்கிடப்பதைக் கண்டு தேடுதல் பணி தொடங்கப்பட்டது.

விபத்தில் உயிரிழந்த நான்கு பேரையும் உடனடியாக அடையாளம் காண முடியவில்லை. விபத்துக்கான காரணமும் இன்னும் அறியப்படாத நிலையில், விபத்து குறித்தும், உயிரிழந்தவர்கள் யார் என்பது குறித்தும் ஆஸ்திரிய போலீசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

# இஸ்ரேலுக்கு தகவல் கொடுத்ததாக 2 பாலஸ்தீனியர்களை கொன்று

## மின்கம்பத்தில் கட்டி தொங்கவிட்ட ஆயுதக்குழுவினர்



**ரமல்லா : நவ. 27,**

**மேற்குகரையில் உள்ளதுல்ஹரம் அகதிகள் முகாமில் இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் அதிரடி சோதனை நடத்தினர்.**

மேற்குகரை பகுதியில் உள்ள துல்ஹரம் அகதிகள் முகாமில் கடந்த 6ம் தேதி இஸ்ரேல் படையினர் அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, அகதிகள் முகாமில் பதுங்கி இருந்த ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே நடந்த மோதலில் ஆயுதக்குழுவை சேர்ந்த 3 பேர் இஸ்ரேல்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், அகதிகள் முகாமில் ஆயுதக்குழுவினர் பதுங்கி இருப்பது குறித்த ரகசிய தகவலை இஸ்ரேல் பாதுகாப்புப்படையினருக்கு தெரிவித்ததாக 2 பாலஸ்தீனியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயுதக்குழுவினர் நடத்திய இந்த தாக்குதலில் 2 பாலஸ்தீனியர்களும் கொல்லப்பட்டனர். பின்னர், கொல்லப்பட்ட 2 பாலஸ்தீனியர்களின் உடலையும் ஆயுதக்குழுவினர் மின்கம்பத்தில் கட்டி தொங்கவிட்டனர். இந்த சம்பவம்தொடர்பானவீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கருப்பு வெள்ளி கொண்டாட்டம் இணையவழி வர்த்தகத்தில் புதிய உச்சம்



**அமெரிக்கா : நவ. 27,**

**அமெரிக்காவில், நவம்பர் மாத நான்காவது வியாழக்கிழமை “தேங்க்ஸ்கிவிங் டே” என்றும் அடுத்த நாளான வெள்ளிக்கிழமை “ப்ளாக் ஃப்ரைடே” என்றும் கொண்டாடப்படுகிறது.**

கருப்பு வெள்ளி என நவம்பரில் அழைக்கப்படும் இந்நாளில் தொடங்கி கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு தொடக்கம் வரை அமெரிக்கர்கள், தங்கள் குடும்பத்தினருடன் ஆடைகள், அணிகலன்கள், புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வாங்கி கொண்டாடி மகிழ்வது வழக்கம். இதனால் கடைகளில் கூட்டம் அலைமோதும். மேலும், வர்த்தகர்கள், தங்கள் வியாபாரத்தை பெருக்குவதற்காக பல தள்ளுபடிஅறிவிப்புகளையும், ஊக்க தொகை மற்றும் பரிசு பொருட்கள் போன்ற பல சலுகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவார்கள்.

கடைவழி வர்த்தகத்தை போன்றே இணையதள வழி வர்த்தகமும் மிகவும் மும்முரமாக நடைபெறும். இந்நிலையில், அமெரிக்காவில் கருப்பு வெள்ளி அன்று நடைபெற்ற இணையவழி வர்த்தகம், $9.8$ பில்லியன் அளவிற்கு நடைபெற்றதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. அதிக தள்ளுபடிகள் மற்றும் மின்னணு சாதனங்களை வாங்க அதிகரிக்கும் விருப்பம் ஆகியவையே இதற்கு காரணம் என்றும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. ஸ்மார்ட்போன், ஸ்மார்ட்வாட்ச், தொலைக்காட்சி உள்ளிட்ட பொருட்கள் மக்களால் முதலில் விரும்பப்படும் பொருட்களாக உள்ளன.

கடந்த சில மாதங்களாக விலைவாசி உயர்வின் காரணமாக மக்கள் அதிக செலவு செய்வதை தவிர்த்து வந்ததால், வர்த்தகர்களிடம் பொருட்கள் தேங்கி கிடந்தது. ஆனால், தற்போது விற்பனை சூடு பிடித்திருப்பதை வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். கோவிட்-19 பெருந்தொற்று காலகட்டத்திற்கு பிறகு தொய்வடைந்திருந்த சில்லறை வர்த்தகத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் என தெரிவிக்கும் பொருளாதார நிபுணர்கள், அடுத்து வரும் நாட்களில் விற்பனையின் அளவு இதே போன்று நீடிக்குமா என்பது இனிதான் தெரிய வரும் எனவும் கூறுகின்றனர்.

# 15 வயதில் சிறை : 8 ஆண்டுகளுக்குப் பின் ஊர் திரும்பும் மாரா பக்கீர் – சாதித்துக் காட்டிய ஹமாஸ்



**ஜெருசெலம் : நவ. 27,**

**ஹமாஸ் 13 பிணைக்கைதிகளை விடுதலை செய்த நிலையில், சிறையிலிருந்த 39 பாலஸ்தீன சிறைவாசிகளை விடுதலை செய்திருக்கிறது இஸ்ரேல் அரசு. அடுத்த நான்கு தினங்களுக்கு, 150 பாலஸ்தீன சிறைக்கைதிகளும், 50 இஸ்ரேலிய பிணைக்கைதிகளும் விடுதலை செய்யப்பட விருக்கிறார்கள். இஸ்ரேல் விடுதலை செய்த சிறைவாசிகளில் பெரும்பான்மை ஆனவர்கள் பெண்கள், சிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**

ஜெருசெலத்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட 13 நபர்களில் மாரா பக்கீரும் ஒருவர். 2015,2016 காலகட்டங்களில் இஸ்ரேல்-பாலஸ்தீன மக்களுக்கு இடையேயான வன்முறை இன்னும் அதிகளவில் இருந்தது. 2015ம் ஆண்டு 15 வயதான மாரா பக்கீரைக் கைது செய்து சிறையில் அடைத்தது இஸ்ரேல் அரசு. 15 வயதான மாரா பக்கீர் , ஜெருசெலத்திலிருக்கும் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தவர். பள்ளிச் சீருடையில் சென்று அங்கிருந்த இஸ்ரேலிய காவல்துறை அதிகாரிகளை தாக்க முயன்றதாக கைது செய்யப்பட்டார் மாரா. மாரா பக்கீரை சம்பவ இடத்திலேயே சுட்டது இஸ்ரேலிய காவல்துறை. இடது கையில் காயங்களுடனேயே கைது செய்யட்டார் மாரா பக்கீர். காவல்துறை அதிகாரியை தாக்க முயன்ற காரணத்திற்காக 8.5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமும், மாரா பக்கீருக்கு விதிக்கப்பட்டது. மாரா கைது செய்யப்பட்டதும், இஸ்ரேலிய கேக் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த மாராவின் தந்தையின் வேலையும் பறிபோனது.

கிழக்கு ஜெருசெலத்தில் பாலஸ்தீனர்கள் அதிகளவில் வசிக்கும் பெயிட் ஹனினா பகுதியில் தான் மாரா பக்கீரின் குடும்பம் வசித்து வருகிறது. 8 ஆண்டுகளாக தொடப்படாத மாராவின் அறையை தற்போது சுத்தம் செய்துகொண்டிருக்கிறார் மாறாவின் தாயார். வெஸ்ட் பேங்கில் இன்னமும் குடும்ப சுமை காரணமாக அதிக நேரம் வேலை செய்துகொண்டிருக்கிறார் மாராவின் தந்தை. எந்தவித அரசியல் பின்புலமும் இல்லாத குடும்பத்துக்கு, மாராவின் கைது பெரும் இடியாய் இறங்கியது.

2011ம் ஆண்டு இஸ்ரேலிய ராணுவ வீரர் கிலாட் ஷாலித்துக்குப் பதிலாக 1000 பாலஸ்தீன சிறைவாசிகளை விடுவித்தது இஸ்ரேல் அரசு. இந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி, ஹமாஸ் 240 பிணைக்கைதிகளை சிறைப்பிடித்த போதும், பாலஸ்தீன சிறைவாசிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே முதன்மை குரலாக ஒலித்தது. காஸாவில் இந்த முறையுத்தம் ஆரம்பித்ததும், மாரா பக்கீர் உட்பட பலரை தனிமைச் சிறைக்கு மாற்றியது இஸ்ரேல் அரசு. இந்த இடைப்பட்ட காலங்களில் மாரா பக்கீர் ஓர் அரசியல் அடையாளமாக சிறைக்குள்ளேயே உருவாகியிருந்தார். பாலஸ்தீன சிறைகளில் வாடும் பெண்களுக்கான பிரதிநிதி அவர். மாராவின் விடுதலையை நாங்கள் பெரிதாகக் கொண்டாடப் போவதில்லை. காஸாவில் இன்னும் போர் நடந்துகொண்டிருக்கிறது. என்கிறார் மாராவின் தாயார். காஸாவில் நடக்கும் போர் இஸ்ரேலிய சிறைகளை வெறுமையாக்கட்டும்.

கற்கள் வீசுவது, வன்முறைக்கு காரணமாக இருப்பது போன்ற குற்றங்களின் அடிப்படையில் பலரைக் கைது செய்திருக்கிறது இஸ்ரேல் அரசு. கைது செய்யப்பட்டவர்களில் பலர் இன்னும் நீதிமன்ற விசாரணைக்குக்கூட ஆஜர்படுத்தப்படவில்லை. முறையான விசாரணை கூட இல்லாமல், சிறையில் பல ஆண்டுகள் அடைப்பது சர்வதேச குற்றம். ஆனால், அதையெல்லாம் எந்த அரசும் பின்பற்றுவதில்லை.

சிலநாட்கள்குடும்பத்துடன் செலவழித்துவிட்டு, சட்டம் படிக்கவிருக்கிறாராம் மாரா பக்கீர். மாரா பக்கீரைப் போன்ற பெண்கள் தான் பாலஸ்தீன மக்களுக்கான உரிமையைப் பெற்றுத் தர முடியும்.

# என்னது டவல் விலை ரூ.77 ஆயிரமா? அதிர்ச்சியில் வாடிக்கையாளர்கள்



**பாரிஸ் : நவ. 27,**

**பிரபல ஆடை தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு டவலின் விலை 77 ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு இருப்பதால் வாடிக்கையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.**

ஒரு சாதாரண டவல் விலை சந்தையில் ரூ.50 முதல் சில நூறு வரை விற்பனை செய்யப்படுகிறது. நிறுவனங்கள் மற்றும் தரத்திற்கு ஏற்ப விலை மாறுபாடுஇருக்கும். ஆனால், ஒரு டவல் விலை ரூ.77,000 என்றால் எப்படியிருக்கும்? பலென்சியாகா (Balenciaga) என்ற ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் இணையதளத்தில் அவர்களின் குளியல் துண்டின் விலை ரூ.77,000 ($925 அமெரிக்கடாலர்) என்று பட்டியலிடப்பட்டுள்ளது.

பலரும் இதைக்கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்ததாக சமூக வலைத்தளங்களில் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர். பாரிஸில் நடைபெற்ற “ஸ்பிரிங் 2024” நிகழ்விலும் இது காட்சிப்படுத்தப்பட்டது. இந்த டவல் டெர்ரிபருத்திதுணியால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முன்பக்கத்தில் ‘Balenciaga’ என்ற நிறுவனத்தின் பெயர் நூலால் தைத்து பொறிக்கப்பட்டுள்ளது. இதை நிறுவனம் டவர் ஸ்கெர்ட் என்று அழைக்கிறது.

அதாவது துண்டு தான், ஆனால் பாவாடை போலவும் பயன்படுத்த முடியும் என்று கூறப்படுகிறது. இந்த பாவாடை துண்டின் நீளம் முழங்கால் வரை இருக்கிறது. காட்சிப்படுத்தப்பட்ட சில மணிநேரத்திலேயே சமூக வலைத்தளங்களில் இதற்கு எதிரான கருத்துகள் பரவ தொடங்கின. ஒருபடி மேலாக, iKEA நிறுவனமும் தங்களின் எக்ஸ் பக்கத்தில், “இதே தரத்திலான துண்டு எங்களிடம் மலிவு விலையில் கிடைக்கிறது,” என்று பதிவிட்டுள்ளது.

நெட்டிசன்கள் சமூக வலைத்தளங்களில் இதன் விலை குறித்து கடுமையாக விமர்சித்துள்ளனர். பலென்சியாகா டவல் ஸ்கர்ட் வெறும் $5 (சுமார் 500 ரூபாய்) மட்டுமே தகுதி பெற்றுள்ளதாக ஒப்பீடுகளை இணைய வாசிகள் பதிவிடுகின்றனர். சிலர் இவற்றை ஒரு மரியாதைக்காக வாங்கினாலும், பெரும்பாலானோரிடம் இதற்கு வரவேற்பு இல்லை.

# ஹமாஸ் பிடியில் இருந்து விடுதலையான இஸ்ரேல் சிறுவன் தந்தையை பார்த்ததும் கட்டியணைத்து மகிழ்ச்சி



**ஜெருசலேம் : நவ. 27,**

**இஸ்ரேல் மீது கடந்த மாதம் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் பயங்கரவாத தாக்குதல் நடத்தினர்.**

இஸ்ரேல் மீது கடந்த மாதம் 7ம் தேதி காசா முனையில் இருந்து செயல்படும் ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் போன்ற ஆயுதக்குழுக்கள் பயங்கரவாத தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 237 பேரை பிணைக்கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இந்த தாக்குதலை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் போர் அறிவித்தது.

போரில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 14 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரின்போது மேற்குகரை பகுதியிலும் வன்முறை வெடித்தது. இந்த மோதலில் மேற்குகரையில் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா, எகிப்து, கத்தார் உள்ளிட்ட நாடுகள் முயற்சித்தன. முயற்சியின் பலனாக கடந்த 24ம் தேதி முதல் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 4 நாட்களுக்கு தற்காலிக போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. மேலும், தங்கள் வசம் உள்ள பிணைக்கைதிகளில் முதற்கட்டமாக 50 பேரை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கு மாறாக தங்கள் நாட்டின் சிறையில் உள்ள பாலஸ்தீனியர்களில் 150 பேரை விடுதலை செய்ய செய்ய இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி, இஸ்ரேல் சிறையில் இருந்து இதுவரை 39 பாலஸ்தீனிய கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மாறாக பிணைக்கைதிகளில் 13 இஸ்ரேலியர்கள், தாய்லாந்து நாட்டினர் 4 பேரை ஹமாஸ் ஆயுதக்குழு விடுதலை செய்துள்ளது. இந்நிலையில், ஹமாஸ் ஆயுதக்குழுவினர் பிடியில் பிணைக்கைதியாக இருந்த இஸ்ரேலியர்களில் 9 வயதான ஒஹட் முன்டிர் என்ற சிறுவனும் விடுதலை செய்யப்பட்டுள்ளான். விடுதலையான சிறுவன் தனது குடும்பத்தினரை சந்தித்த வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. தந்தையை கண்ட சிறுவன் துள்ளி குதித்தவாறு சென்று கட்டியணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய வீடியோ வைரலாகி வருகிறது.

# பிரேசிலில் புதிய டைனோசர் இன கால்தடம் கண்டுபிடிப்பு



**பிரேசில் : நவ. 27,**

**பல கோடி நூறு ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர் இனம் வாழ்ந்தது. அதன் கால் தடங்கள், எலும்புகள், புதை படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் டைனோசரின் பல இனங்கள் கண்டறியப்பட்டன.**

இந்த நிலையில் பிரேசிலில் கால்தடங்கள் மூலம் புதிய டைனோசர் இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பிரேசிலின் அரராகுவாரா நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கால்தடங்களைவிஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். இதில் பார்லோவிச்னஸ் ரேபிடஸ் என்று அழைக்கப்படும் புதிய டைனோசர் இனம் கண்டறியப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இது60முதல்90செ.மீ.(2முதல் 3 அடி) உயரம் கொண்ட ஒரு சிறிய மாமிச விலங்கு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்லோவிச்னஸ் ரேபிடஸ் ஒரு சிறிய, வேகமான மாமிச உண்ணி ஆகும். இது சுமார் 12.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.



# பயங்கரவாதத்தை இந்தியா நசுக்கிவிட்டது மன் கி பாத் உரையில் பெருமிதம்

# டிசம்பர் 1ஆம் தேதியிலிருந்து விசா இல்லாமல் சீனா செல்ல 6 நாடுகளுக்கு அனுமதி





# ஊழல்: புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி மீது பிரதமர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை


| சென்னை / புதுக்கோட்டை | 27.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கணேஷ் வாசுதேவ மாவ்லங்கர் , இந்திய அரசியல்வாதி (பி.1888) (இ.1956)



ஆ. பூவராகம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1899) (இ.1973)



சுரேஷ் ரைனா , இந்தியத் துடுப்பாட்டக்காரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

தி. சதாசிவ ஐயர் , ஈழத்துத் தமிழறிஞர், புலவர் (பி.1882) (இ.1950)



லெப்டினன்ட் சங்கர் , ஈழப்போராட்டத்தில் இறந்த விடுதலைப் புலிகளின் முதல் போராளி (பி.1960) (இ.1982)



வி. பி. சிங் , 7வது இந்தியப் பிரதமர் (பி.1931) (இ.2008)



## மாவீரர் நாள் (தமிழீழம்) (தமிழீழம், இலங்கை)